RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 17 நவம்பர 2023 இதழ்:- 27

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை உணவு அருந்த விடாமல் சுற்றி வளைத்த பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்கார்கள்!



கனடாவில் உணவகம் ஒன்றில் இரவு உணவருந்தச் சென்ற கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்ட விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, 14 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமை இரவு வான்கூவரிலுள்ள (3ம்பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இலங்கையின் 22 மில்லியன் மக்களுக்கு நட்டஈடு வழங்க ராஜபக்ஷாக்களிடம் வெளிநாடுகளில் பணம் உள்ளது



உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தால் இந்த நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கு இழப்பீடு வழங்க ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியே போதுமான பணத்தை வைத்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## சீனா ஏன் தமிழர்களை நோக்கி வருகின்றது?



சில தினங்களுக்கு முன்னர் சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது முன்னணி புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதி. நிதிகளை சந்தித்திருந்தார். சந்திப்பில் பங்கு கொண்டவர்கள் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் விடயங்களை முன்வைத்தனர். (17ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-8110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N & Conlin Rd**



**Oshawa** **$279,000**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

**Eglinton / Mccowan**




**Scarborough** **$499,900**
Bedrooms: 2 Washrooms: 2
Convenience living on Eglinton line

**Warden Ave / Enterprise Blvd**




**Markham** **$749,000**
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

**Dundas/Hurontario St**



**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

**Warden/Steeles**




**Scarborough** **$760,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space

**Main St. E & Russell St.**



**Southgate** **$799,999**
Bedrooms: 4 Washrooms: 3
Detached Home W/3063 Sq Ft

**Kennedy Rd & Bovaild Dr. E**



**Brampton** **$1,100,000**
Bedrooms: 3 Washrooms: 3
recently renovated, sep. entrances

**Eglinton Ave & Danforth Rd**



**Toronto** **$1,150,000**
Bedrooms: 4 Washrooms: 4
Low Maintenance Fees.

**Fletcherscreek Blvd/Bovaird Dr**



**Brampton** **$3,500**
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

**Markham Rd & Lawrence Ave**


FOR LEASE



**Scarborough** **$2,000**
Basement for lease
Close To TTC, Shopping & 401.

**Meadowvale / Sheppard**

FOR LEASE



**Scarborough** **$1,5[illegible]000**
Bedrooms: 1 Washrooms: 1
Great neighbourhood

**9th Line/14th Ave**



**Markham** **$1,689,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

## Looking for more house?

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை உணவு அருந்த விடாமல் சுற்றி வளைத்த பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள்!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உணவகம் ஒன்றிற்கு உணவருந்தச் சென்றுள்ளார். அப்போது, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் உணவகத்துக்குள் நுழைந்து, ட்ரூடோவை சுற்றி வளைத்துள்ளனர்.

உடனே போர் நிறுத்தம் வேண்டும், ஜஸ்டின் ட்ரூடோ, உங்கள் கைகளில் இரத்தக்கறை உள்ளது, நீங்கள் ஒரு கொலைகாரர், எங்களுக்கு பதில் சொல்லுங்கள் என்றெல்லாம் கோஷம் எழுப்பியது அந்தக்கூட்டம். ஆகவே உணவருந்த வந்த ட்ரூடோ, உணவருந்தாமலே உணவகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது.

விடயம் என்னவென்றால், அதே நாள் மாலையில் இந்திய உணவகமான Vij's என்னும் உணவகத்துக்குச் சென்றுள்ளார் ட்ரூடோ. அங்கேயும் சென்ற பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் அவரை சூழ்ந்து கொண்டு கோஷம் எழுப்பியுள்ளார்கள்.

வான்கூவர் உணவகத்திலிருந்து ட்ரூடோ வெளியேறியதும், பொலிசார் கூட்டத்தைக் கலைக்க முயன்றுள்ளார்கள். அப்போது, 27 வயது நபர் ஒருவர் பெண் பொலிசார் ஒருவரை முகத்தில் குத்திக் காயப்படுத்தியதுடன், அவரது கண்களை விரல்களால் குத்திக் காயப்படுத்தியுள்ளார். அவரும் பொலிசாரை பணி செய்ய விடாமல் தடுத்த 34 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக வான்கூவர் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க கனேடிய சமாதான செயற்பாட்டாளர் விவியன் சில்வர் ஹமால் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். விவியன் ஹமாஸ் போராளிகளினால் கடத்தப்பட்டிருக்கலாம் என முன்னதாக சந்தேகிக்கப்பட்டது.

எனினும், இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதல்களின் போது விவியன் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவியனின் மரணத்தை அவரது புதல்வர் உறுதி செய்துள்ளார். விவியன் கனடாவின் வின்னிபெக்கில் பிறந்தவர் எனவும் பின்னர் இஸ்ரேலில் குடியேறியதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான செயற்பாட்டாளராக விவியன் பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளதாக பாராட்டப்பட்டுள்ளது. விவியனின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இலங்கை 22 மில்லியன் மக்களுக்கு நட்டஈடு வழங்க ராஜபக்ஷாக்களிடம் வெளிநாடுகளில் பணம் உள்ளது



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூறப்பட்டவர்களிடம் இருந்து மீட்கும் பணியை இப்போதே தொடங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்கள் நாட்டிற்கு வெளியே வைத்திருக்கும் பணத்தில் இருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டிற்கு வெளியே வைக்கப்பட்டுள்ள அனைத்து பணத்தையும் கொண்டு வர முடியும். அந்த பணத்தில் தான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். அப்போதைய ஜனாதிபதி, அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களுடன் பணியாற்றிய பலரால் பொதுப் பணம் திருடப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் சரிந்தது, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீடு வழங்கவும், திருடப்பட்ட பணத்தை திறைசேரியில் கொண்டு வரவும் உச்ச நீதிமன்றம் உத்தர விட்டிருக்க வேண்டும். இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனு க்கும் இழப்பீடு கோருவதற்கு உரிமை உள்ளது என்றும், திருடப் பட்ட பணத்தை திரும்பக் கொண்டு வரவும், பொருளாதாரம் மீண்டும் எழுச்சி பெறச் செய்யவும் கேட்டுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் வங்குரோத்து நிலைக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என பொது ஜன பெரமுன உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை ஆட்சி செய்ய விடாத காரணத்தினாலேயே இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கு காரணம் என அவர் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கம் நாட்டை கடன் வலையில் சிக்க வைத்ததினால் தற்போது அவர்களே பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் ராஜபக்ஷவைத் தவிர வேறு எந்தக் குழுவும் அவமானப்படுத்தப்படவில்லை என்று கூறிய அவர், அப்பாவி மக்களுக்கு நிவாரணம் வழங்கச் செயல்பட்டதால் தான் கட்சிக் காரர்கள் அவமானப்படுத்தப் படுகிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# டாக்டர் வரதராஜாவின் தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள் ஆங்கில நூல் வெளியீடு

கடந்த 12 நவம்பர் 2023 ஞாயிற்றுக் கிழமை ஸ்காபரோவில் நடைபெற்ற டாக்டர் வரதராஜாவின் தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள் என்ற ஆங்கில நூலின் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக அரங்கு நிறைந்த மக்களோடு நடை பெற்றது.

டாக்டர் வரதராஜா அவர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடைபெற்ற கொடிய – இறுதி யுத்தத்தின் போது காயமடைந்த பொதுமக்களதும் போராளிகளதும் உயிர்களைக் காப் பாற்ற இரவு பகலாக போராடிய மூன்று வைத்தியர்களில் ஒருவர். (மற்றவர்கள் டாக்டர் சத்தியமூர்த்தி, டாக்டர் சண்முகராஜா)



டாக்டர் வரதராஜா அவர்கள் நெஞ்சி னில் காயம் அடைந்தார். அந்த நிலையிலும் இறுதிக் கணம் வரை யுத்த பூமியில் நின்று பணியாற்றிய ஒருவர். இராணுவத்தால் கைது. செய்யப்பட்ட அவர் பல மாதங்கள் தடுப்பு முகாம்களில் கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாகி அரச சாட்சியாக உண்மைக்கு மாறாக பேசும்படி கேட்ட போதெல்லாம் துணிச்சலோடு நான் ஒரு மருத்து வர். எனது பணி உயிருக்காகப் போராடுபவர்களைக் காப்பாற்றுவதே தவிர வேறு ஒன்றும் நான் செய்ய மாட்டேன் என்று துணிந்து கூறிய துடன் அதற்காகவே பல்வேறு இன்னல்களை அனுபவித்த ஒருவர்.

யுத்த களத்தில் மருந்து வசதிகளோ சத்திர சிகிச்சை வசதிகளோ இன்றி அந்த அந்த இடங்களில் மக்களது உயிர்களைக் காப்பாற்றப் போராடிய வர். அன்று யுத்த களத்தில் இவர்கள் தான் சிக்குண்ட மக்களுக்குக் கடவு ளாகத் தெரிந்தார்கள். அப்படிப் பட்ட தெய்வத்திற்குச் சமமான ஒருவரது நூாலே அன்று வெளியீடு செய்யப் பட்டது.



இந்நிகழ்வுவுக்கு கானா நாட்டு இளவரசர் தனது இளவரசியோடு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நூலினை பேராசிரியர் வணக்கத்திற்குரிய வணபிதா சந்திர காந்தன் அவர்கள் ஆய்வுரை நிகழ்த் தினார். திரு குயின்ரஸ் துரைசிங்கம் அவர்கள் வெளியீட்டு உரையாற்றி னார். கனடா நாட்டின் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

நூலின் முதற்பிரதியை தமிழீழத்தின் தேசியப் பாடகர் நாட்டுப் பற்றாளர் வர்ண ராமேஸ்வரனது துணைவி யார் திருமதி சபர்மதி வர்ண ராமேஸ்வரன் அவர்களுக்கு டாக்டர் வரதராஜா அவர்கள் வழங்கிக் கௌர வித்தார்.

இந்நூால் ஒவ்வோர் தமிழனது இல்லங்களிலும் இருக்க வேண்டிய நூால் மாத்திரமல்ல எமது எதிர்காலச் சந்ததி கட்டாயம் வாசிக்க வேண்டிய அவசிய தேவையுள்ள நூாலாகும். இந் நூாலினைப் பெற விரும்புப வர்கள் 437 328 5974 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# பெரிய நாடுகள் சர்வதேச சட்டத்தை மீறினால் உலகம் அனைவருக்கும் ஆபத்தாக மாறும் - கனடிய பிரதமர்

பெரிய நாடுகள் விளைவுகள் எதையும் எதிர் கொள் ளாமல் சர்வதேச சட்டத்தை மீறுகிறது என்றால் உலகம் அனைவருக்கும் மிக ஆபத்தான ஒன்றாக மாறும் என கனேடிய பிரதமர் ட்ரூடோ மீண்டும் இந்தியாவை வம்பிழுத்துள்ளார். இந்தியாவுடனான தூதரக மோதல் நீடிக்கும் நிலையிலேயே கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த கருத்தை தெரி வித்துள்ளார்.

காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக ட்ரூடோ குற்றம் சாட்டிய திலிருந்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.

45 வயதான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள குருத்வாராவிற்கு வெளியே சுட்டுக் கொல்ல ப்பட்டார். ஆனால் பிரதமர் ட்ரூடோவின் குற்றச் சாட்டுகளை மொத்தமாக மறுத்த இந்தியா அவரது குற்றச்சாட்டுகள் அபத்தமானது என்று குறிப்பிட்டு ள்ளது.

இந்த நிலையிலேயே ஊடகங்களை சந்தித்த பிரதமர் ட்ரூடோ, கனடா சார்பில் நிஜ்ஜார் வழக்கை அமெ ரிக்கா இந்தியாவிடம் விவாதிக்குமா என்ற கேள்வி க்கு பதிலளிக்கையில்,



கனேடிய மண்ணில் கனேடிய குடிமகன் கொல்லப் பட்டதில் இந்திய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்ற நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் ஆரம்பத்தி லிருந்தே எங்களுக்குத் தெரிந்த போது இந்த விடய த்தின் உண்மைத்தன்மையை அறிய எங்களுடன் இணைந்து பணியாற்றுமாறு நாங்கள் இந்தியாவை அணுகினோம் என்றார். மட்டுமின்றி, அமெரிக்கா போன்ற எங்கள் நண்பர் கள் மற்றும் நட்பு நாடுகளையும் நாங்கள் அணுகி னோம் என்றார். கனடா எப்போதும் சட்டத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள நாடு என குறிப் பிட்டுள்ள ஜஸ்டின் ட்ரூடோ.

இந்தியாவை மறைமுகமாக குறிப்பிட்டு பெரிய நாடுகள் விளைவுகள் எதையும் எதிர் கொள்ளாமல் சர்வதேச சட்டத்தை சர்வ சாதாரணமாக மீறுகிறது என்றால் உலகம் அனைவருக்கும் மிக ஆபத்தான ஒன்றாக மாறும் என்பதில் சந்தேகமில்லை என்றார். மேலும், இந்தியாவுடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட கனடா முயற்சித்துள்ளது. அது தொடர்ந்து செய் யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கனடாவை தொடர்ந்தும் தாக்கிப் பேசும் அலிசப்ரி



கனடா மீதான தனது எதிர்ப்பையும், மனித உரிமைகள் மீதான அந்நாட்டின் இரட்டை நிலைப்பாட்டையும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் கனடா உண்மையான அக்கறை காட்ட வில்லை எனவும் மாறாக வாக்கு வங்கி அரசியலில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் விடுத்துள்ள பதி வொன்றில் அவர் இதனை கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்திலும், ஆக்கிரமிக்கப்பட்ட சிரிய கோலானிலும் குடியேற்ற நடவடிக்கைகளைக் கண்டிக் கும் ஐ.நா தீர்மானத்திற்கு எதிராக கனடா வாக் களித் ததை தனது சமீபத்திய வலைத்தளப் பதிவில் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

கனடா எப்படி வாக்களித்தது என்று பாருங்கள். பாசாங்குத்தனமான இரட்டைத் தரத்தைப் பார்க்கிறீர களா?, அவர்கள் இலங்கையில் மனித உரிமைகள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் துரதிர்ஷ்டவசமாக தவ றாக நினைக்கிறீர்கள். எல்லா வழிகளிலும் வாக்குவங்கி அரசியல்தான். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 145 நாடுக ளில் இந்தியாவும் அடங்கும். நவம்பர் 9ஆம் திகதி குறித்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# எனது படத்துடன் முகநூலில் அவதூறு பரப்பியவருக்கு எதிராகவே முறைப்பாடு செய்தேன் - பேராசிரியர் வேல்நம்பி

யாழ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் நபர் ஒருவர் தனது முகநூல் பக்கத்தில் எனது அனுமதியின்றி எனது புகைப்படத்தை பிரசுரித்து உண்மைக்கு புறம் பான செய்தியை வெளியிட்டிருந்தார். அதற்கு எதிராகவே நான் காவல்நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளேன் என யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் வேல் நம்பி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவு தூபி தொடர்பில் முகநூலில் பதிவிட்ட நபரு க்கு எதிராக பேராசிரியர் வேல்நம்பி யாழ்ப்பாண காவல்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் அது தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி யுடன் என்னை தொடர்புபடுத்தி, எனது அனுமதியின்றி எனது புகைப்படத்தை பயன்படுத்தி முகநூல்களில் விசமப் பிரச்சாரம் செய்யப்பட்டது. குறித்த செய்தியை முகநூலில் பதிவிட்ட நபருருக்கு எதிராக யாழ் காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தேன்.

காவல்துறை விசாரணைகளில் இருந்து தப்புவதற் காகவும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் முள்ளி வாய்க்கால் தூபி தொடர்பில் தேவையற்ற விடயங்களை



என் மீது சுமத்துவதற்காகவும் பொய்யான தகவல்களை குறித்த நபர் ஊடகங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளியாரை கையாளும் கூட்டு உடன்பாடு தேவை

வடக்கு, கிழக்கில் சீனாவின் முதலீடுகள் எதிர்க்க ப்பட வேண்டும் இவ்வாறு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். எமது பகுதிகளுக்குள் சீனா உள் நுழைகின்ற போது, அது இந்தியாவுக்கும் சீனாவுக்குமான முரண்பாடாக மாற்றமுறும். அது எங்களை பாதிக்கும்.அவ்வாறான நிலைமையை நாம் அனுமதிக்கக் கூடாது, என்றும் செல்வம் கூறுகின் றார்.

சீனாவின் முதலீடுகளை சிலர் பூகோள அரசியலு டன் தொடர்புபடுத்தப் பார்க்கின்றனர். பூகோள அரசியலுக்கும் இதற்கும் ஒரு தொடர்புமில்லை இது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தாவின் கருத்து.

பூகோள அரசியல் முரண்பாடுகள் என்பது நிரந்தர மான ஒன்று. அதற்கு பல பரிமாணங்கள் உண்டு. அரசியல், பொருளாதார, இராணுவம் என அது மிகவும் பரந்தது. எனவே, சீனா, எவ்வாறான நோக்கத்தில் உள்நுழைய முயற்சிக்கின்றது என்பதை சீனா மட்டுமே அறியும்.

எனவே சீனாவின் நகர்வுகளுக்கு பின்னால் பூகோள நலன்கள் இல்லையென்று கடற்றொழில் அமைச்சர் நற்சான்றிதழ் வழங்க முடியாது. சர்வதேச உறவு களில் ஒரு நிலைப்பாடுண்டு.

அதாவது, பலம்பொருந்திய சக்திகளின் நகர்வு களின் இலக்கை எவரும் இப்படித் தான் இருக்கு மென்று, அறுதியிட்டுக் கூறவிட முடியாது. எது வும் நடக்க கூடும் என்னுமடிப்படையில் தான் விடயங்களை கணிக்க முடியும்.

சர்வதேச கட்டமைப்பில் இதனை பின்வருமாறு அழைப்பர். அதாவது, ஒருவர் மற்றவரின் உள் நோக்கத்தை அறிந்திருக்க மாட்டார். இந்த அடிப் படையில் தான் அனைத்து முக்கிய முடிவுகளும் எடுக்கப்படுகின்றன.

உதாரணமாக சீனா பத்து வருடங்களுக்கு பின்னர் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை இந்தியா வால் அறிய முடியாது அதேபோன்று, இந்தியா எவ்வாறு சிந்திக்கின்றது என்பதை சீனாவால் அறிய முடியாது.

எதுவும் நடக்கலாம் என்னும் அடிப்படையில் தான் பலம் பொருந்திய நாடுகள், அவர்களின் பூகோள நலன்களுக்கான வியூகங்களை வகுப்பர்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் ஆசியாவில் ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியடைய முயற்சிக்கும், சீனா இலங்கையையும் அதற்கான தளமாக பயன்படுத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் செல்வம் அடைக் கலநாதனின் கருத்தை நிராகரிக்க முடியாது. அது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் இவ்வாறான கருத்துக்களை ஆங்காங்கே கூறி விட்டு அமைதியாக கலைந்து செல்வது, சரியானதொரு அணுகுமுறையல்ல.

வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டிருக்கும், தமிழ் தேசியவாத கட்சிகள் மத்தியில் இது தொடர் பில் ஒரு கூட்டு இணக்கப்பாடு அவசியம். அதா வது, சீனாவின் விடயங்களில் எவ்வாறான கொள்கை நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் அல்லது சீனாவுக்கு எவ்வாறான விடயங்களை வலியுறுத்த வேண்டும் இது தொடர்பில் கூட்டு இணக்கப்பாடு அவசியம்.

யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, அடிப்படையிலேயே வெளியாரின் அழுத்த ங்களுக்காக காத்திருக்கும் அரசியல் தான். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறை யிடுவது தொடக்கம், இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதும் வரையிலான அனைத்து செயல்பாடு களும, வெளியாரிடம் முறையிடுவதும், அதன் மூலமான அழுத்தங்களை எதிர்பார்ப்பதும்தான்.

ஆனால் இந்த வெளியாரில் சீனா இல்லை. தமிழர் விவகாரத்தில் சீனா ஓர் அந்நியன். இந்தியா, அமெரிக்கா போன்ற நட்பு சக்தியல்ல. ஏனெனில், தமிழ் மக்களின் விவகாரத்தில் தலையிடும் நிலைப் பாடு தங்களிடம் இல்லையென்று சீனா வெளிப் படையாகவே கூறிவிட்டது.

இந்த நிலையில் சீனாவை நோக்கி தமிழர்கள் செல்ல முடியாது. எனவே தமிழ் மக்களது அரசியல் நலன்களை முன்னிறுத்தி, யாருடன் நிற்க வேண்டும் யாருடன் நிற்கக் கூடாது, என்பதில் தமிழ் தேசிய கட்சிகள் கூட்டான தீர்மானமொன்று க்கு வரவேண்டும்.

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்குச் சென்ற போது எனக்கு கடும் மன உளைச்சல் ஏற்பட்டது - அமெரிக்கத் தூதுவர்

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞயிறு தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு சென்றபோது தனக்கு கடும் மன உளைச்சல் ஏற்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

விஜயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் தனது ஓ தளத்தில் குறிப்பிடுகையில் நான் சீயோன் தேவாலயத்திற்குச் சென்று, 2019 இல் இடம் பெற்ற அந்த பயங்கரமான நாளின் தாக்கம் குறித்து போதகர் ரோஷன் மகேசனுடன் கலந்துரையாடியதில் எனக்கு கடுமையான மனஉளைச்சல் ஏற்பட்டது. இங்கு கொல்லப்பட்ட 25க்கும் மேற்பட்ட குழந்தைகளால் சமூகம் மேம்படுவதற்கான ஒரு குணப்படுத்தும் ஆதரவைப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.






இதேவேளை, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு குழு உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவும் நிலப்பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு குழு உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த பங்கு குறித்து பாராட்டுதல்களை தெரிவித்துள்ளார்.

சமூகங்களுக்கிடையில் இனவாத பதற்றங்களை தணிப்பதில் அவர்கள் பகிர்ந்துகொண்ட விடயங்கள் இலங்கையின் வெற்றி மற்றும் பன்முகத்தன்மைக்கு முக்கிய சான்றாகும் எனத் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நிறுவப்பட்டுள்ள யேசு சபையைச் சேர்ந்தவரும் இலங்கை கூடைப்பந்தாட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவருமான அமெரிக்காவில் பிறந்த யூ ஜின் ஜோன் ஹெபர்ட்டின் சிலையை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்வையிட்டுள்ளார்.

கடந்த 1948ஆம் ஆண்டில் அமெரிக்காவின் லூசியானாவிலிருந்து இலங்கை வந்த யேசு பையைச் சேர்ந்த யூஜின் ஜோன் ஹெபர்ட், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியை தேசிய சாம்பியன்ஷிப்களுக்கு வழி நடத்தினார். அப்போதும் அருட் தந்தை யூஜின் ஜோன் ஹெபர்ட், கூடைப்பந்து விளையாட்டை சமூகங்களை இணைக்கவும் புரிந்துணர்வை வளர்க்கவும் ஒரு இராஜதந்திர கருவியாகப் பயன்படுத்தினார் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் தனது ஓ தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் அமெரிக்காவின் 75 வருட கூட்டாண்மை இலங்கையர்களுக்கு எவ்வாறான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்பதை ஆராய்வதற்காக அமெரிக்கதூதுவர் ஜூலிசங் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் அதில் இருந்து படிப்பினைகளை கற்றுக்கொள்வதற்கும், முன்னேறுவதற்கும், ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கும் காணப்படும் வாய்ப்புகளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ள இலங்கையர்களிடம் இருந்து இனங்கண்டு பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் ஒன்று சேரந்து ஈடுபட ஆவலுடன் காத்திருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.




# இலங்கையில் சீன ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி! இந்தியாவிற்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த அமெரிக்கா!

சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் முடக்கும் வகையில் அமெரிக்கா புதிய திட்டத்தை மேற் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், சீனாவுடன் போட்டியிடும் வகையில் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்கான 553 மில்லியன் டொலர் திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் மிகப் பெரிய முதலீடு ஆகும் இது.

கடுமையான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி யில் இருந்து மீள்வதற்கு இலங்கை போராடி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இலங்கைக்கு இது மகிழ்ச்சியையும், சீனாவிற்கு அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

கொழும்பு துறைமுகம் 2021 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மேலும் இந்தப் புதிய முனையம் வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு பெரிய பொரு ளாதார வளர்ச்சியை கொடுக்கும்.

பசிபிக் கடலில், சீன கடலில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா தற்போது இந்திய பெருங்கடலில் காலடி



எடுத்து வைத்துள்ளது.சீனாவின் ஆதிக்கத்திற்கு இது முற்றுப்புள்ளியாக அமையும் என்கிறார்கள். இன்னொரு பக்கம் இலங்கையில் சீனாவின் ஆதிக்கத் திற்கு அமெரிக்கா முற்றுப்புள்ளி வைப்பது இந்தியா விற்கு மகிழ்ச்சியான செய்தி ஆகும்.

பாதுகாப்பு ரீதியாகவும், கடல் ரீதியாகவும், ஆசிய வளர்ச்சி ரீதியாகவும் இந்தியாவிற்கு இந்த முடிவு சாதகமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷாக்களே காரணம் - உயர்நீதிமன்றம் தீர்ப்பு!



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, முன்னாள் பிரத மர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் உட்பட முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த பலர் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு காரண மாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள்அடங்கிய குழு வினர் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், பிரதிவாதிகள் இழப்பீடு வழங்க வேண்டியதில்லை என்று நீதிமன்றம் தீர்மானித்தது. இருப்பினும் மனுதாரர்களுக்கு தலா 150.000 ரூபாவை செலவுத் தொகையாக வழங்க வேண்டு மென்றும் உத்தரவிடப்பட்டது

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, புவனேக அலுவிஹாரே, பிரிய ந்த ஜயவர்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு இடம் பெற்றது.

# காசாவின் பாராளுமன்றத்தைக் கைப்பற்றிய இஸ்ரேல்?

ஹமாஸ் சுரங்கப்பாதையில் அடைத்து வைக்கப் பட்டிருந்த பணயக் கைதிகளை விடுப்பதற்காக, அவர்களது தோழர்கள் காஸாவின் பாராளுமன்ற கட்டிடத்தில் துப்பாக்கியுடன் நின்ற புகைப்படம் வெளியாகியுள்ளது. காஸாவின் பாராளுமன்ற கட்டிட த்தை 13 நவம்பர் 2023 இரவு இஸ்ரேல் கைப்பற்றிய தாக கூறப்படுகிறது.

பாலஸ்தீன சட்டசபை கட்டிடத்தில் உள்ள அறை ஒன்றில், துப்பாக்கிகள் மற்றும் கொடிகளுடன் இஸ்ரேலிய துருப்புகள் நிற்கும் புகைப்படம் வெளி யாகி அதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந் துள்ளது. ஆனால் இந்த புகைப்படத்தின் நம்பகத் தன்மை இன்னும் நிறுவப்படவில்லை என இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் Yoav Gallant, ஹமாஸ் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது என்றும், IDF ஒவ்வொரு புள்ளியிலும் முன்னேறி வருகிறது



என்றும் கூறினார். அதேபோல் இஸ்ரேலிய துருப்புக் கள் சுற்றி வளைத்துள்ள காஸாவின் மிகப்பெரிய மருத்துவமனையின் நியோ-நேட்டல் பிரிவில் இப் போது ஏழு குழந்தைகள் இறந்து விட்டதாக கூறப் பட்டது.

# காசா விவகாரத்தை அமெரிக்கா கையாளும் விதம் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்கத்திற்குள் கடும் அதிருப்தி



ஹமாஸ் இஸ்ரேல் மோதலை அமெரிக்கா கையாளும் விதம் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைகளத் திற்குள் கடும் கருத்துவேறுபாடுகள் காணப்படு வதை அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் பிளிங்கென் இதனை தெரிவித்துள்ளார். காசா யுத்தத்தை அமெரிக்கா கையாள்வது குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்குள் மாத்திரமல்லாமல் பைடன் நிர்வாகத்திற்குள்ளேயே கடும் அதிருப்தி காணப்படும் நிலையிலேயே பிளிங்கென் இந்த மின்னஞ்சலை அனுப்பியுள்ளார்.

யுஎஸ்எயிட்டை சேர்ந்த 100க்கும் மேற்பட்டவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்தை கோரி கடிதம் எழுதி யுள்ளதாக கடந்த வாரம் சிஎன்என் செய்தி வெளி யிட்டிருந்தது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் அதிருப்தி கடிதங்கள் வெளியாகியுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. உங்களில் பலருக்கு இந்த ஆழ்ந்த நெருக்கடியால் ஏற்படும் துன்பம் தனிப்பட்ட பாதிப்பு களை ஏற்படுத்துகின்றது என்பதை நான் அறிவேன் என பிளிங்கென் தனது மின்னஞ்சலில் தெரிவித்து ள்ளார்.

இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் சிறுவர்கள் குழந்தைகளின் படங்களை தினசரி பார்க்கும் போது ஏற்படும் வேதனையை நானும் அனுபவிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைவர்களுக்கு செவிமடுக்கும் பண்பு அவசியம்

யுத்தம் முடிவுற்று பதின்னான்கு ஆண்டுகள் சென்று விட்டன. இந்தக் காலத்தில் பல்வேறு அரசி யல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான செயல்பாடுகள் உள்ளூர் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, வெளியிலும் முன்னெடுக்கப்பட்டன. இந்திய, அமெரிக்க ராஜதந்திர சந்திப்புக்கள் பலவும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனாலும் தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையிலிருந்து, முன்னோக்கி பயணி க்க முடியவில்லை. இதனை எந்தவோர் அரசியல் தலைவராலும் மறுதலிக்க முடியாது.

இந்த விடயத்தில் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டலாம் ஆனால், இறுதியில் அனைவருக்கும் தோல்வி என்பது மட்டும்தான் உண்மை.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது அதனை சாதகமாகப் பயன்படுத்துவது தொடர்பில், மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அவற்றை கருத்தில் கொண்டு சிந்திக்கும் நிலையில் சம்பந்தன் இருக்கவில்லை.

ஒரு புதிய அரசியல் யாப்பின் மீதான நம்பிக்கை பொருத்தமானதல்ல அதற்கு மாறாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் நிலைப்பாடே சரியானது அதற் கான உதவியை இந்தியாவிடம் கோரலாம் என் னும் அபிப்பிராயம் முன்வைக்கப்பட்டது.

அரசியல் என்பது எப்போதுமே சாத்தியங்களின் கலையென்று நம்பும் புத்திஜீவிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் அவ்வாறான கருத்தை உறுதியாக முன் வைத்தனர். ஆனால், அவை எவற்றையும் சம்பந்தன் மற்றும் அவரது பாதடிச் சுவட்டைப் பின்பற்றியவர்கள் சிறிதும் கவனத்தில் எடுக்க வில்லை.

தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் காலத்திற்கு காலம் இவ்வாறான அரசியல் யதார்த்தங்களை சொல்லக் கூடியவர்கள் இருந்திருக்கின்றனர் ஆனால் அவர்கள் எப்போதும் எண்ணிக்கையில் குறைவானவர்களாகவும் ஊடக பலமில்லாத வர்களாகவும் இருந்தனர்.

யதார்த்தவாதி வெகுசன விரோதி என்பது போல், அவர்களின் யதார்த்தமான குரல்கள் தமிழ் தேசிய வாத அரசியல் அலையால் சாதாரணமாக அடித் துச் செல்லப்பட்டது. இப்போதும் கூட, நமது அரசியல் தலைவர்கள் என்போர், மற்றவர்களை செவிமடுக்கும், பரஸ்பர நட்புறவுடன் விடயங் களை எடைபோடும், தவறுகளை ஒப்புக்கொள்ளும் பண்பை வெளிப்படுத்துவதற்கு தயங்குபவர்களா கவே இருக்கின்றனர்.

40 வருட அனுபவமுள்ள எங்களுக்கு இவர்கள் எதைச் சொல்வதென்று, தங்களை நோக்கிவரும் கருத்துக்களை புறக்கணிக்கவே முயற்சிக்கின்ற னர். எவரேனும் அவ்வாறான முயற்சிகளை மேற் கொள்ள முற்படும் போது, அவர்களை பலவீனப் படுத்தும் வகையிலான போலியான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவர்களுக்கு யாரோ நிதியளிப்பதான, போலியான கதைகள் புனையப்படுகின்றன. உண்மையில் தமிழ் தேசியத அரசியல் பரப்பில், திட்டமிட்டு செயல்படு வதற்கான எந்தவோர் அவசியமும் வெளிநாடுகளு க்கு இல்லை.

ஏனெனில் அந்தளவுக்கு கருத்தில் கொள்ளத்தக்க அரசியல் கட்டமைப்புடன் தமிழர் தரப்பு இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவரீதியில் பல மாக இருந்த காலத்தில் வேண்டுமானால் அவ் வாறான தேவைகள் இருந்திருக்கலாம். எனவே இனியாவது தமிழ் தேசியவாத தலைவர்கள் என்போர் மாற்றுக் கருத்துக்களை செவிமடுக்கும் பண்பை வெளிப்படுத்த வேண்டும்.

தங்கள் மீது முன் வைக்கப்படும் விமர்சனங்களை எதிரி மனோபாவத்துடன் நோக்குதல் கூடாது. அத னால் ஒருபோதுமே, அரசியலில் முன்னோக்கி பயணிக்க முடியாது.

அரசியல் யதார்த்தங்களை செவி மடுக்காமையே, கடந்த பதின்னான்கு வருடகால அரசியல் நகர்வில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எதனையும் அடைய முடியவில்லை என்னும் உண்மையை செவிமடுப் பதே. இனிவரும் காலத்தை கையாள்வதற்கான பால பாடமாகும்.

# மயிலத்தமடு, மாதவனையில் அத்துமீறிக் குடியேற்றியவர்களை வெளியேறுமாறு நீதிபதி கட்டளையிட்டும் தொடரும் போராட்டம்



மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அரச காணியில் அத்துமீறிய குறியேறியவர்களை வெளியேறுமாறு, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் 13 நவம்பர் 2023 கட்டளை பிறப்பித்தார். கடந்த 10ம் திகதி இடம்பெற்ற குறித்த வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது.

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேறிய தாக தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில், மகாவலி அதிகார சபையினால் கடந்த 2023 செப்டெம்பர் 22 அன்று வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவிக்கப்பட்ட 13 பேரும் நீதிமன் றில் ஆஜராகி இருந்தனர். மகாவலி அதிகார சபை சார்பாக மன்றுக்கு அரச சட்டத்தரணி டில்கானி டிசில்வா ஆஜரா கியிருந்தார்.

அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எந்த வகையான ஆவணமும் நீதிமன்றுக்கு அத்துமீறி குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் சமர்ப்பிக்கப்படாததால், மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய குறித்த 13 பேரை யும் வெளியேறுமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

இதேவேளை மயிலத்தமடு,மாதவனை பகுதியில் அத்துமீறிய பயிர்ச் செய்கை யாளர்களை அகற்றுமாறு கோரி, அப் பகுதி கால்நடை பண்ணையாளர்கள் 66வது நாளாகவும் போராட்டம் முன்னெ டுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை அறவழிப் போராட்டம், கொட்டும் மழைக்கு மத்தியிலும் 66வது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின் றது . சித்தாண்டியில் பண்ணையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத் தில், தங்களுக்கு நியாயமான தீர்வொன்று கிடைக்கப் பெறும் வரை தொடர்ந்து போராட்டம் இடம் பெறும் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் தங்களது உறுதிப்படுத்திய வசிப்பதற்கான சான்று கள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் அவர் களை அங்கிருந்து வெளியேறுமாறு நீதிபதி கட்டளை பிறப்பித்துள்ள நிலை யில் நீதிமன்ற கட்டளையை மதித்து அவர்களை அங்கிருந்து வெளியேற்று வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வருவார்களா என்ற சந்தேகம் உள்ளதாகவும், இதே போல் கடந்த காலத்தில் கொழும்பு உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கும் இதே. போன்றதொரு உயர் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பித்தும் அவர்கள் அவ் விடத்தில் இருந்து வெளியேறவில்லை என பண்ணையாளர்கள் கவலை தெரி வித்தனர். எனவே நீதிமன்ற கட்ட ளையை நாங்கள் மதிக்கிறோம். அவர் கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறி யமைக்கான உறுதியான விடயங்கள் இடம்பெறும் போதும், சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் உறுதிப்படுத் தும் போது நாங்கள் எங்களது போரா ட்ட நிறுத்தம் தொடர்பாக யோசிப்பதாக தெரிவித்தனர்.

## 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் அமைக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு?

13ஆவது திருத்தச்சட்டத்தின் பிர காரம் பல்கலைக்கழகங்கள் அமைக் கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் உயர்தரம் பயிலும் அனைவருக்கும் பல்கலைக் கழக கல்வியை பெற்றுக் கொள்ள முடியும் என ஜனதிபதி தனது வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 4 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நாட் டில் உள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையும் அதிகரிக் கப்படும். உள்ளூர், வெளிநாட்டு மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர இது சிந்த வழியாகவும் அமையும் என்றார்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக் கில் காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான இழப்பீட்டை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து ள்ளதாகவும், இதற்காக மேலும் 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்து ள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்த லும் பொதுத் தேர்தலும் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வரவுசெலவுத்திட்டத்தை தாக்கல் செய்து உரையாற்றிய போதே இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நல்ல மனிதர்களை எங்கே தேடுவது?

தொண்டு செய்வதற்குரிய நிலையங்களை அமைப்பதற்குரிய நிலங்கள் இருக்கின்றது. அங்கு கட்டடங்களை அமைப்பதற்கு. பண உதவி செய்வதற்கு பல அன்பர்கள் முன்வருவார்கள் ஆனால் அந்த நிலையங்களில் இருந்து நமது சமூகத்திற்கு தொண்டு செய்வதற்குரிய மனிதர்களை எங்கே தேடுவது?...

நான் சிங்கபூர். மலேசியா போன்ற பல நாடுகளிற்கு சென்ற போது அங்கே உள்ள பல நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 5 மாற்று திறனாளிகள் பணி செய்து கொண்டு இருப்பார்கள். அங்கே உள்ள பல நிறுவனங்கள் மாற்று திறனாளிகளின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் தங்களது நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளிற்கு ஏதாவது சிறு சிறு தொழில் வாய்ப்பினை வழங்கி சமூகத்தில் அவர்களையும் தமது உறவுகள் என்ற உயர்ந்த நிலையில் வைத்திருக்கின்றார்கள்.

ஆனால் எமது சமூகத்தில் இந்த உயர்ந்த எண்ணங்கள் இன்னமும் இல்லாமல் இருப்பது மிக வேதனையாக உள்ளது. இன்று மாற்றுத் திறனாளிகளை ஆலய வாயில்களில் யாசகம் கேட்டு நிற்கும் காட்சிகளை தான் பார்க்க முடிகின்றதே அல்லாமல் நிறுவனங்களில் வேலை செய்வதை மிக அரிதாக காண முடிகின்றது.

தெய்வக் குழந்தைகளான மாற்று வலுவுடையோருக்காக உருவாக்கப்பட்ட சிவபூமி பாடசாலை உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

எங்கள் மண்ணில் மாற்று வலுவுடைய தெய்வக் குழந்தைகளிற்கென தனியான பாடசாலை இல்லாத சூழ்நிலையில் சிவபூமி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

அமரத்துவம் அடைந்த கண் வைத்திய நிபுணர் குகதாசன் போன்ற பல நல்ல உள்ளங்களின் ஒத்துழைப்புடன் இந்த பணி வெற்றிகரமான நிறைவடைந்து இன்று பல நூறு பிள்ளைகள் இந்த பாடசாலையிலே கல்வி கற்கின்றார்கள்.

சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டியில் மூன்று முறை பங்கு பற்றிய ஒரு வரலாற்று பாடசாலையாக இந்த தெய்வக் குழந்தைகளின் பாடசாலை பெரு விருட்சமாக திகழ்கின்றது. இங்கு கல்வி கற்கும் பிள்ளைகள் ஆண்டு தோறும் பல நிகழ்வுகளில் பங்கு பற்றி பரிசில் பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில் நடை பெற்ற நடன போட்டியில் எங்கள் பாடாசலையில் இருந்து கலந்து கொண்ட மாணவன் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளான்.

கடந்த 2020ம் ஆண்டு சிவபூமி மாற்று வலுவுடையோர் பாடசாலையானது இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளில் சிறந்த பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு முதாலம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இங்கு கல்வி கற்கும் தெய்வக் குழந்தைகள் பிறப்பிலே சில குறைபாடுகளுடன் பிறந்தாலும் அவர்கள் அனைவரும் விசேட பல திறமைகளுடன் இருக்கின்றார்கள். இந்தப் பிள்ளைகளிடம் உள்ள பெருந்தன்மையானது இன்று சாதாரன மனிதர்களிடம் காண முடிவதில்லை. ஒரு பிள்ளை விழுந்தால் உடனே ஏனைய பிள்ளைகள் எல்லோரும் ஓடிச் சென்று அந்தப் பிள்ளையை தூக்கி அன்பாக அழைத்து வருவார்கள்.

ஒரு நாளும் இவர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதில்லை. உணவு உண்ணும் போது அருகில் உள்ள பிள்ளைகளிற்கு ஊட்டி விடுவார்கள். இறைவன் கொடுத்த பிறவி இரக்க குணம் இந்தப் பிள்ளைகளிற்கு நிறையவே உண்டு.

சிறு உணவுகளை கூட வீனாக கொட்ட மாட்டார்கள். 21 வருட வரலாற்றிலே இந்தப் பிள்ளைகள் எந்தவொரு கதிரை. மேசையினை உடைத்ததாக வரலாறே இல்லை அந்த அளவிற்கு மிகவும் பண்புடன் கல்வி கற்கின்றார்கள்.

சாதாரனமாக ஏனைய பாடசாலைகளில் ஒவ்வொரு ஆண்டும் உடைக்கப்படுகின்ற கதிரை மேசைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் ஆனால்



செஞ்சொற்செல்வரின் சிறப்பு மிக்க உரை

இந்த தெய்வக் குழந்தைகள் அவ்வாறு நடப்பதில்லை. ஒரு பிள்ளை தவறுதலாக சிறு குப்பையினை கீழே பேட்டு விட்டால் எல்லா பிள்ளைகளும் ஓடிச் சென்று உடனே அந்த குப்பையினை எடுத்து தொட்டியிலே போடுவார்கள்.

இத்தகைய பண்புகள் தற்கால மனிதர்களிடம் காண்பது பெரிதும் அரிதாகவே உள்ளது. இந்த மாணவர்களின் நடத்தை மற்றும் ஒழுங்கை பார்த்து ஏனைய சாதாரண மாணவர்கள் திருந்தி நடக்க வேண்டும்.

எங்கள் பாடசாலையிலே பல நூறு பிள்ளைகள் படிக்கின்றார்கள் ஆனால் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பவதில்லை. அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால் இவர்கள் வளர்ந்து என்ன செய்யப் போகின்றார்கள்?

உண்மையில் சிவபூமி பாடசாலையில் வாழ்வாதார பயிற்சி வழங்கப்படுகின்றது சிறு சிறு தொழில்களை செய்வதற்குரிய முறையான பயிற்சி வழங்கப்படுகின்றது. இங்கு படித்த பல மாணவர்கள் உத்தியோகம் பெற்று நல்ல முறையிலே தொழில் செய்கின்றார்கள்.

சிங்கப்பூர் நாட்டிலே பிரதமராக இருந்தவர் ஒரு அறிவிப்பினை வெளியிட்டார் அதாவது எந்த தொழிற்சாலையாக இருந்தாலும் நிறுவனமாக இருந்தாலும் மாற்று வலுவுடைய 5 பிள்ளைகளிற்கு தொழில் வழங்க வேண்டும் என்று.

சிங்கபூர் நாட்டிலே உள்ள கடைகளிலே நான் பார்த்த பொழுது ஸ்ரிக்கர் ஒட்டும் பணிகளிலே ஈடுபட்டு கொண்டு இருந்தார்கள். நான் ஒரு பிள்ளையை பார்த்து உங்களை படம் எடுக்கலமா என்று கேட்ட பொழுது அந்தப் பிள்ளை என்னை தனது முகாமையாளிடம் அழைத்து சென்று தனது சைகையினாலே என்னை இந்த பெரியவர் படம் எடுக்க பார்க்கின்றார் என்று சொல்லியது.

உடனே அந்த முகாமயாளர் இது தான் இந்தப் பிள்ளைகளின் நல்ல பண்பும் ஒழுங்கும் என பாராட்டி இனி நீங்கள் படம் எடுக்கலாம் என தெரிவித்தார்.

அந்த அளவிற்கு இந்த தெய்வக் குழந்தைகள் மிகுந்த நற்பண்புகளுடனும் விசுவாசத்துடனும் பணி செய்கின்றார்கள்.

ஒரு முறை நான் மலேசியாவில் சென்று பார்த்த பொழுது அங்கு உள்ள விமான நிலையத்திலே பயணிகளிற்கு வழங்கப் படுகின்ற ஒலி கேட்கும் சாதரனங்களை சுத்தம் செய்து கொண்டு இருந்தார்கள். உலகத்தில் உள்ள பல நாடுகள் மாற்று வலுவுடையோர்கள் தொடர்பில் பல உயர்ந்த நிலையினை அடைந்து விட்டார்கள். ஆனால் எங்கள் மண்ணிலே தான் இந் தெய்வ குழந்தைகள் பற்றிய மகிமை இன்னமும் சரிவர புரியவில்லை. எங்கள் மண்ணிலே எத்தனை கடைகள். தொழிற்சாலைகள். நிறுவனங்கள் உள்ளன ஆனால் இந்தப் பிள்ளைகளிற்கு யாருமே தொழில் வழங்குவதில்லை. அவர்கள் மாற்று வலுவுடையோர்களை மதிப்பதில்லை.

இதன் காரணமாகத் தான் மாற்று வலுவுடைய பலர் இன்று ஆலய வாசல்களிலே நின்று யாசகம் கேட்கின்றார்கள். பல நாடுகளிலே தற்காலத்தில் மாற்று வலுவுடையோர்கள் யாசகம் கேட்பதில்லை ஆனால் எங்கள் மண்ணிலே இந்த அவலம் தொடர்கின்றது.

எங்கள் சிவபூமி பாடசாலையிலே ஆசிரியர்கள் குருவாக மட்டுமன்றி தாயாக தாதியாக கடமையாற்றி இந்த தெய்வப் பிள்ளைகளை வளர்க்கின்றார்கள். மாற்று வலுவுடைய பிள்ளைகளிற்கு இங்கு சிறு சிறு தொழில் பயற்சிகளை வழங்கி வருகின்றோம் ஏனென்றால் இவர்கள் வீட்டிற்கு போனால் சமூகத்திற்கு போனால் இவர்களை சரியாக மதிக்கும் பக்குவம் எங்கள் மண்ணிலே இன்னமும் இல்லாத காரணத்தால். இவர்கள் தாமாக தமது சிறு தொழில் முயற்சிகளை தேடும் நோக்கில் நாங்கள் இந்த கடின பணியை செய்து வருகின்றோம்.

மலேசியா. சிங்கபூர் போன்ற நாடுகளிலே உள்ளதைப் போல எங்கள் மண்ணில் உள்ள வியாபார நிறுவனங்களில் சிறு சிறு தொழில் வாய்ப்புக்களை வழங்க முன்வர வேண்டும். சில பெற்றோர்கள் பாடசாலைக்கு போய் பெரிதாக என்ன செய்யப் போகின்றாய்? என்று ஏளனத்துடன் மறித்து வைத்திருக்கின்றார்கள். அவர்களிற்கு சிறு வயது தொடக்கம் ஊக்கத்தினையும் உற்சாகத்தினையும் கொடுக்க முன்வருவதில்லை.

தற்காலத்தில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் மாற்று வலுவுடையோர்களின் விபரங்களை பதிவு செய்து பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்கள். வடக்கிலே பல ஆயிரம் மாற்றுவலுவுடையார் இருக்கின்றார்கள் ஆனால் பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெரிதாக யாரும் ஊக்கப்படுத்துவதில்லை

எங்களுடைய பிள்ளைகள் சர்வதேச ஒலிம்பிக் போட்டியிலே பங்கு பற்றி இருக்கின்றார்கள். இரண்டு மாணவர்கள் அமெரிக்காவின் முன்னால் ஜனாதிபதி ஒபாமா அவர்களின் பாரியாரிடம் சென்று பரிசு பெற்று வந்துள்ளார்கள்.

இந்த செய்தியை கூட எங்கள் யாழ்ப்பாணம் சரியாக கண்டு கொள்ளவில்லை. சரியாக கண்டு கொண்டால் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள அறிவுள்ள சமுதாயம் பாடசாலைகளிலே கொண்டு வந்து சேர்த்து இருப்பார்கள்.

சில இடங்களிலே நான் பார்த்த பொழுது ஆழகான ஆடையுடன் தெருவிலே நடமாடுகின்றார்கள் அவர்களை யாரும் கவனிப்பதில்லை. எங்களுடைய முதியோர் இல்லத்திலே மாற்று வலுவுடைய பல முதியவர்களை கொண்டு வந்து விட்டு விட்டு எவ்வளவு செலவு என்றாலும் நாங்கள் அனுப்புறம் என்று சொல்லி விட்டு வெளிநாட்டுக்கு ஒடுகின்றார்கள்.

தன்னுடைய உடுப்பை கூட சரியாக கட்ட முடியாத முதியோர்களை முதியோர் இல்லங்களிலே விட்டு விட்டு வெளிநாட்டுக்கு ஒடித் தப்புகின்றார்கள்.

எனவே இந்த மன நிலை மாற வேண்டும். மாற்று வலுவுடையார்கள் தொடர்பில் நல்ல மனமாற்றம் எங்கள் மண்ணில் ஏற்பட வேண்டும்.

பாடசாலைகளிலே மாற்று வலுவுடையோருக்கு கல்வி வழங்குவதற்கு கட்டடங்கள் கட்டுகின்றார்கள் ஆனால் அங்கு பிள்ளைகள் இருப்பதில்லை. கட்டடங்களிலே மூன்று பிள்ளைகள் மட்டும் இருக்கின்றார்கள்.

நான் சில பாடசாலைக்கு சென்ற போது இந்த புதிய கட்டடம் என்ன என்று கேட்டால் இது எங்களுக்கு விசேட தேவையுடையோருக்காக தந்தது என்பார்கள்.

சரி பிள்ளைகள் எங்கே? என கேட்டால் அவர்கள் ஒழுங்கா வருவதில்லை நாங்கள் தற்பொழுது வேறு தேவைக்காக பயன் படுத்துகின்றோம் என சொல்லுகின்றார்கள்.

ஒவ்வொரு வலையத்திலும் பல கட்டடங்கள் கட்டப்பட்டு அவை அனைத்தும் பேசாப் பொருளாக உள்ளது. எனவே எங்கள் சமூகம் மாற்று வலுவுடையார்கள் குறித்து தங்கள் மனதினை மாற்றி அவர்களை பாடசாலைக்கு அனுப்பும் முயற்சியினை மேற் கொள்ள வேண்டும்.

எங்கள் மண்ணில் உள்ள நிறுவனங்கள் அவர்களிற்கு சிறு சிறு தொழில் வாய்ப்புக்களை வழங்க முன்வர வேண்டும்.

ஆறு.திருமுருகன் – தலைவர்.

துர்க்கா தேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பழை.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 நவம்பர் 2023 முதல் 10 நவம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் (ஸ்பீற் குயின்) அவர்களின் 30வது ஆண்டு நினைவு நாள் 10 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தை களுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னையா அன்னம்மா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 12 நவம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 43வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சதாசிவம் சண்முகம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 43வது ஆண்டு நினைவு நாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சதாசிவம் சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அமராவதி சண்முகம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுண் றோட்டை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவுநாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அமராவதி சண்முகம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 11 நவம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 16 நவ 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்




### திரு பழனி கனகசபை


### திருமதி கனகசபை நாகம்மா

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு,திருமதி பழனி கனகசபை, கனகசபை நாகம்மா ஆகியோரது நினைவு நாளையொட்டி அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 13 நவம்பர் 2023 திங்கட்கிழமை கந்தசஷ்டி உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு, பழனி கனகசபை, திருமதி கனகசபை நாகம்மா தம்பதிகளது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை ாழ்விடமாகவும் கொணடிருந்த திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2023 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் றோட்டை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 43வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2023 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் றோட்டை வாழ்விடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 நவம்பர் 2023 சனிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிமுத்து இரத்தினம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 நவம்பர் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்தியின் 7வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்தி தனது பெற்றோர்களுடனும் தங்கை ஜெனனியுடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



12 நவம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கச்சாய் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 நவம்பர் 2023 திங்கட்கிழமை அனலைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு பழனி கனகசபை அவர்களதும் திருமதி நாகம்மா கனகசபை அவர்களதும் நினைவாக கந்தசஷ்டி விரத ஆரம்ப நாளன்று அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 நவம்பர் 2023 திங்கட்கிழமை அமாவாசை உபயமாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராமதாசன் விஜயஸ்ரீ குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 நவம்பர் 2023 வியாழக்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும் அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளது சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


உ

சுவாமியே சரணம் ஐயப்பா!

## ஐயப்பன் இந்து ஆலய பாடசாலை

அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய பாடசாலை
முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு இந்து சமயம், தமிழ், பொது அறிவூட்டி
மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களிலே ஆசிரியர்களையும்
உருவாக்கிக் கொடுத்த ஆசிரியர் பெருந்தகைகள்
மூப்பும், நோயும் காரணமாக இளைப்பாறியுள்ளனர்.
எதுவித ஊதியமுமின்றி தாம் பெற்ற கல்வியை முன்னெடுத்த
அப்பெரியர்களுக்கு ஆலயத்தின் சார்பில்
நன்றி கூறிக் கொள்கின்றோம்.
அவ்விடத்தை நிரப்பி இவ்வாலய பாடசாலை மாணவர்களை
அறிவூட்ட கனடாவில் வசிக்கின்ற ஆசிரியர் பெருந்தகைகள்
முன்வந்து தாம் பெற்ற கல்வியை மாணவர்களுக்கு ஊட்டி
வளர்த்தெடுத்து கல்விச் செல்வம் வளர
உதவுமாறு அன்புடன் அழைப்பதுடன்
எல்லாம் வல்ல இறைவன் காத்து ரட்சிக்க வேண்டுகின்றோம்.

நன்றி
அறங்காவலர்கள்

தொடர்புகளுக்கு
416 - 321 - 6104

ஈழமுரசு

ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும் பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்

# 69



தலைவன் பிறந்தநாள் அதுவே தமிழன் நிமிர்ந்த நாள்!

வீழ்ந்து விடாத வீரம் மண்டியிடாத மானம்

# அகவை விழா

## மாபெரும் எழுச்சி விழா

## இருப்பாய் தமிழா நெருப்பாய்!

AAROSAI

2023 நவம்பர் 26 ஞாயிறு

மாலை 5 மணி

இடம்:

| TORONTO | MONTREAL |
|---|---|
| METROPOLITAN CENTRE | Le Château Royal |
| 3840, Finch Ave East; | 3500 Bd du Souvenir, |
| Scarborough ON., M1T 3T4 | Lavel, Montreal |
| (Kennedy & Finch) | QC H7V 1X2 |

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்

ஈழநாடு குரல் செந்தாமரை உதயன் விளம்பரம் வணக்கம் Krishna LIVE TELECAST CANADA கீதவாணி timeFM தேடிப்பார் தளிர் தமிழ் மிரர் Tamil Mirror


Toronto (647) 657-8566, (647) 783-3466, (587) 982-8829, (437) 224 7923

Montreal 438-483-1157

Yugam Media Inc


‘தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்’
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்’இல்
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2023 - திங்கட்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes’
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
ரொறன்ரோ
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
( McCowan Road & Elgin Mills Road East )
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

சுவாமியே சரணம் ஐயப்பா!



# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

**ஐயப்பன் மெய்யடியார்களே!**

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**

24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**

01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**

25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**

26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**

01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**

15-01-2024 திங்கட்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**

21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# “அலப்பறை கிளப்புறோம்”
## யாழ்ப்பாணத்தின் சுவை மாறுகின்றதா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணம் டில்கோ ஹோட்டலில் ஒரு விருந்து இடம் பெற்றது. ''அலப்பறை கிளப்புறோம்'' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட டிஜே பார்ட்டி அது. அந்நிகழ்வை குறித்து யாழ்.மாநகர சபை நிர்வாகமும் கச்சேரியும் ஹோட்டல் நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு கேட்டிருக்கின்றன. அந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தும் Shuttle Vibe என்ற கொழும்புமைய நிறுவனத்தோடு கதைக்குமாறு கூறி அந்த நிறுவனத்தின் தொடர்பிலக்கத்தை ஹோட்டல் நிர்வாகம் கொடுத்திருக்கிறது. நிகழ்வில் டிஜே இசை வழங்குனரோடு சிலர் தொலைபேசியில் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்தபடி அவருடைய வீட்டுக்குச் சென்ற இருவர் மிரட்டியிருக்கிறார்கள். போலீஸ் பாதுகாப்போடு அந்த நிகழ்வை நீங்கள் நடத்தினாலும் நிகழ்வு முடிந்த பின் நீங்கள் வெளியே வரத்தான் வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. எனினும் நிகழ்வு குறித்த தினத்தில் நடந்திருக்கிறது.



அந்நிகழ்வில் மொத்தம் 100க்கும் குறையாதவர்கள் பங்கு பற்றியதாகவும் அவர்களில் எட்டுப் பேர்களே பெண்கள் என்றும் ஹோட்டல் நிர்வாகம் கூறுகின்றது. அந்த எட்டுப் பேர்களில் இரு பெண்கள் தமது துணைவர்களோடு வந்தார்கள் என்றும் இருவர் சகோதரிகள் என்றும் நால்வர் ஒரே உறவு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. அங்கு மது பரிமாறப்பட்டுள்ளது. ஆனால் போதை வஸ்து பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது பிழையான தகவல் என்றும் ஹோட்டல் நிர்வாகம் கூறுகின்றது.

அந்நிகழ்வை எதிர்ப்பவர்கள் இரண்டு நோக்கு நிலைகளிலிருந்து அதை எதிர்க்கிறார்கள்.முதலாவது பண்பாட்டு நோக்கு நிலையில் இருந்து. இரண்டாவது அரசியல் நோக்கு நிலையில் இருந்து. அதாவது இது மாவீரர் மாதம் என்பதனால் இது போன்ற நிகழ்வுகளை ஒழுங்கு செய்யக்கூடாது என்று.

மாவீரர் வாரம் இம்மாத இறுதியில் வருகிறது. மாதத்தின் முதல் வாரத்தில் தீபாவளி வருகிறது. கடந்த வாரம் முழுவதும் யாழ் நகரத்தின் தெருக்களில் ஜனங்கள் நிரம்பி வழிந்தார்கள். ஆனால் அதற்காக தீபாவளியைக் கொண்டாடுபவர்கள் மாவீரர் நாளை அனுஷ்டிக்க வரமாட்டார்கள் என்பதல்ல. ஏன் டிஜே பார்ட்டியில் ஆடிக் களித்திருப்பவர்கள் நினைவுகூர மாட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

பொதுவாக ஒரு மக்கள் கூட்டம் அப்படித்தான் இருக்கும். முதலாவதாக அது மகிழ்ந்திருக்க விரும்பும். ஆடக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் பாடக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் அனுபவிக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் யாரும் இழக்க விரும்புவதில்லை. அதே சமயம் தங்களுக்காக உயிர் நீத்தவர்களை அவர்கள் மறந்து விடுவதுமில்லை. ஜனங்களை.அவர்களை அவர்களாக விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆசாபாசங்கள் விருப்பு வெறுப்புக்கள் சின்னச்சின்னச் சந்தோசங்கள் சலனங்கள்... போன்ற எல்லாவற்றுக்குள்ளாலும் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை இதைச் செய்யாதே என்று கட்டளையிட முடியாது. அவ்வாறு கட்டளையிடுவது ஒரு போர்க்காலத்தில் சாத்தியமாக இருக்கலாம். ஆனால் ஆயுத மோதல்களற்ற ஒரு காலகட்டத்தில் அதை எப்படிச் செய்வது?

தீபாவளியை வருசப் பிறப்பைக் கொண்டாடுமாறு ஆடி அமாவாசையை சித்ராப் பௌர்ணமியை அனுஷ்டிக்குமாறு யாரும் மக்களுக்குக் கட்டளையிடுவதில்லை. நல்லூர் கோயிலுக்கு மடுத் தேவாலயத்துக்கு போகுமாறு யாரும் மக்களுக்குக் கட்டளை இடுவதில்லை. துர்கா மணி மண்டபத்தில் நடக்கும் சுழலும் சொற்போர்களுக்கு, விவாத மேடைகளுக்கு மக்களை யாரும் வாகனம் விட்டு ஏற்றிக் கொண்டு போவதில்லை. இவற்றையெல்லாம் சனங்கள் தாமாகவே செய்கிறார்கள். ஏனென்றால் அவையனைத்தும் மதப் பண்பாட்டினடியாக. நம்பிக்கைகளினடியாக மக்கள் மயப்பட்ட விடயங்கள். எனவே நினைவு கூர்தலை மக்கள் மயப் படுத்துவது எப்படி என்பது தான் இங்குள்ள பிரச்சினை.

நினைவுகளை நினைவுகளின் அடியில் மண்டிக் கிடக்கும் துக்கத்தை கோபத்தை எப்படி அரசியல் ஆக்கசக்தியாக மாற்றுவது என்று சிந்திக்கும் எல்லாக் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் நினைவு கூர்தலை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்று சிந்திப்பது தான் பொருத்தமாக இருக்கும்.

கலை இலக்கியங்கள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றன மக்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவதை காட்டுகின்றன. எனவே பொருத்தமான விதங்களில் மக்களை மகிழ்விப்பதற்குரிய கலைபண்பாட்டுத் தரிசனத்தை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்க வேண்டும். பூகோள மயமாதலின் விளைவாக தொழில்நுட்பப் பெருக்கத்தின் விளைவாக சமூகங்களின் ருசி ரசனைகள் மாறி வருகின்றன. டிஜே பார்ட்டி எனப்படுவது அவ்வாறான ஒன்று தான். டி.ஜே. என்பது டிஸ்க் ஜோக்கி எனப்படும் ஆங்கில வார்த்தையின் சுருக்கம். அதன் பொருள், ஒரு விருந்தில் அல்லது பொது மக்கள் கூடும் இடங்களில் சுவாரசியமாக பாடல்களை இசைப்பது. அதற்கேற்ப ஆடுவது.1935இல் ஓர் அமெரிக்கர் அதை அறிமுகப்படுத்தினார். 1943இல் முதலாவது டிஜே பார்ட்டி இங்கிலாந்தில் இடம் பெற்றது. தமிழ்ப்பகுதிகளில் டிஜே இசை என்பது ஏற்கனவே உள்ள சினிமா பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆடுவதற்கு ஏற்றாற்போல ரீமேக் செய்வது தான். அதில் குறிப்பாக தாளம் தூக்கலாகக் கேட்கும். டும்டும்டும் என்று. அது இதயத்தில் அறைவது போலிருக்கும். ஆனால் அதற்கு ஒரு தலைமுறை ஆடுகிறது. இளையவர்கள் மட்டுமல்ல நடுத்தர வயதினரும் சேர்ந்து ஆடுவார்கள்.

ஆடுவது நல்லது. அது உடலிறுக்கத்தையும் மன இறுக்கத்தையும் நீக்கும். ஈகோவைத் தளர்த்தும். அது ஒரு நல்ல உடற்பயிற்சியும் மனப் பயிற்சியும் ஆகும். ஆனால் எதற்கு ஆடுகிறோம்? எப்பொழுது ஆடுகிறோம்?எ ங்கே ஆடுகிறோம்? பெரும்பாலான இளையோர் ஒன்றுகூடல்களில் டிஜே ஆட்டம் இருக்கும். அங்குள்ள ஒலி பெருக்கிகள் அதிரும் பொழுது அது காதுக்கு இதமாக இருக்கிறதா அல்லது மனதுக்கு இதமாக இருக்கிறதா என்பதைக் குறித்து யாருக்கும் கவலையில்லை. ஆடுவதற்கு ஓர் இசை தேவை அவ்வளவுதான்.

அதேசமயம் எமது நரம்புகளும் காதுகளும் மரத்துப் போய் விட்டன எதையும் அது காட்டுகின்றதா? நல்ல இசையை கேட்கும் காதும் நல்ல இசையை ரசிக்கும் மனமும் மரத்துக் கொண்டு போகின்றனவா? அது ஒரு ருசி மாற்றம். ரசனை மாற்றம். இதுபோல இன்னுமொரு மாற்றத்தை இங்கு சுட்டிக் காட்டலாம்.

கரஞ்சுண்டல் வண்டில் என்பது நமது சிறுபிராய ஞாபகங்களோடு சேர்ந்து வருவது பெற்றோமக்ஸ் விளக்கின் ஒளியில் மணியொலித்தபடி இரவுகளில் எமது தெருக்களில் அது வரும். அதை லாலா மிட்டாய் வண்டில் என்றும் அழைப்பதுண்டு. உறைப்பும் புளிப்பும் கலந்த சூடு பறக்கும் கரஞ் சுண்டலின் பிறப்பிடம் வட இந்தியா என்று கூறப்படுகிறது.அதில் பயன்படுத்தப்படும் கடலை இடத்துக்கிடம் வேறுபடுவதாக விடயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இப்பொழுது நமது திருவிழாக்களில் கரஞ் சுண்டல் கிடைப்பது அரிது. நல்லூர் திருவிழாவில் கடைசி மூன்று நாட்களில் தான் கரஞ்சுண்டல் கிடைப்பதுண்டு. பதிலாக ஸ்பெஷல் என்ற ஒன்று விற்கப் படுகிறது.

கொஞ்சம் மரவள்ளிச் சீவல் கொஞ்சம் பகோடா; சில சிறிய உருண்டையான கடலை வடைகள் சிறிய புளித்த கோதுமை மா வடைகள் அவித்த நூடில்ஸ்....என்று பலதையும் பத்தையும் ஒரு தட்டில் போட்டு அதன் மீது சிறிதளவு கரஞ்சுண்டலைக் கொட்டி ஏதோ ஒரு குழம்பை ஊற்றித் தருவார்கள். அதுதான் ஸ்பெஷல். ஆனால் மொறு மொறுவென்று இருக்கும் மரவள்ளிச் சீவலுக்குள் பொரித்த சிறிய கடலை வடைக்குள் ஏதோ ஒரு பெயர் தெரியாத குழம்பை ஊற்றினால் என்ன நடக்கும்? மொறு மொறுவென்று இருப்பது இழகிப் போய்விடும். அதற்குள் கரஞ் சுண்டலையும் கலக்க எல்லாமே பதம் கெட்டுவிடும்.

ஓர் உணவின் சுவையை அதன் பௌதீகப் பண்பிலிருந்து பிரிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு தின்பாண்டத்தினதும் தனித்துவமான பௌதீகப் பண்பைக் கெடுத்து ஒன்றடி மன்றடியாக எல்லாவற்றையும் ஒன்றாக்கி விடுவது சுவையாக இருக்குமா? ஆனால் அதைத்தான் புதிய சுவை என்று கூறி விற்கிறார்கள் சனங்களும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அது ஒரு ருசி மாற்றம் ரசனை மாற்றம்.

டிஜே பார்ட்டியைப் போலவே அதுவும் யாழ்ப்பாணத்தின் மாறிவரும் சுவையைக் காட்டுகின்றதா? எங்களுடைய செவிகள் ஏன் மரத்துப் போயின? எங்களுடைய சுவை நரம்புகள் ஏன் மரத்துப் போயின? நெஞ்சை உதைக்கும் இசைக்கு எப்பொழுது ஆடப் பழகினோம்? ஒரு சமூகத்தின் புலன்கள் மரத்துப்போய் கூருணர்வு மழுங்கிப் போனால் பிறகு என்ன நடக்கும்? அதை ஏனைய சமூகங்கள் இலகுவாக வேட்டையாடி விடும். அல்லது தோற்கடித்து விடும்.

இது யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுமான பூகோள மயமாதலின் விளைவுகளில் ஒன்று. இவ்வாறு மாறிவரும் ருசி ரசனைகளைக் கவனத்தில் எடுத்துத் தான் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கலை பண்பாட்டு இயக்கங்களும் தமது படைப்புகளை உருவாக்க வேண்டியிருக்கிறது.

போர்க்காலங்களில், குறிப்பாக ஒரு ஆயுதப் பின் போராட்டத்தின் விளைவாகத் தோன்றிய ஒரு கருநிலை அரசு நிலத்தைக் கட்டுப்படுத்திய காலகட்டத்தில் மாவீரர் நாளை ஓர் அரச நிகழ்வாக அனுஷ்டித்து வந்தது. ஆனால் இப்பொழுது மனங்களைக் கட்டுப்படுத்தினால் தான் நிலங்களைக் கட்டுப்படுத்தலாம். அரசியலை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். எனவே மாறி வரும் அரசியல் பொருளாதார, தொழில்நுட்பச் சூழலுக்குள் தமிழ் மக்களுடைய மனங்களை எப்படிக் கவர்வது என்று கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் சிந்திக்க வேண்டும். அதற்கு வேண்டிய கலை பண்பாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்

ஒரு மக்கள் கூட்டம் எதை ரசிக்க வேண்டும்? எதை ருசிக்க வேண்டும்? எதைக் எப்பொழுது கொண்டாட வேண்டும்? எப்படிக் கொண்டாட வேண்டும்? எப்பொழுது கொண்டாட வேண்டும் போன்ற விடயங்களில் மக்களைப் பொருத்தமான இடங்களில் வழிநடத்தத் தேவையான கலை பண்பாட்டுத் தரிசனங்களை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் எதை விவாதப் பொருளாக மாற்றுவது என்பதனை கல்விச் சமூகம் தீர்மானிக்க வேண்டும். நாட்டில் எத்தனை தமிழ் கட்சிகளிடம் மாணவ அமைப்பு உண்டு?எத்தனை தமிழ் கட்சிகளுக்கு பல்கலைக்கழகங்களில் மாணவ அமைப்பு உண்டு?

அண்மை நாட்களாக சமூக வலைத்தளங்களில் விவாதப் பொருட்களாக மாறியிருக்கும் விவாத மேடைகள்.டிஜே பாட்டிகள் போன்றவை யாவும் தமிழ் மக்களுக்கு ஒரு விடயத்தை உணர்த்துகின்றன. நீதிக்காகப் போராடும் ஒரு சமூகம், தனக்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்கத் தவறிய வெற்றிடத்தில் தான் இவ்வாறெல்லாம் நடக்கின்றன. கலை பண்பாட்டு அமைப்புக்கள், மாணவ அமைப்புகள் போன்றன அவ்வாறான தேச நிர்மானத்துக்குரிய கட்டமைப்புகள் தான்.

# மகாவம்ச மனோபாவம்:- இன நல்லிணக்கம் எதிர்கொள்ளும் சவால்!

கட்டுரையாளர்:-
கொழும்பில் இருந்து
- எம்.எல்.எம்.மன்சூர் -

புத்தரின் போதனைகளில் புனிதப் போர் என்ற கருத்தாக்கம் இல்லை புத்த தர்மத்தையும், அதைப் பின்பற்றுபவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்குக் கூட போர் புரிவதற்கு அதில் அனுமதியில்லை. இந்தப் பின்னணியில், புத்த தர்மத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கென ஆட்களை கொலை செய்வதனை நியாயப்படுத்த வேண்டுமானால், புத்தரின் போதனைகளுக்கு வெளியில் ஒரு வலுவான புதிய அத்தியாயத்தைச் சேர்க்க வேண்டும்.

(பௌத்த) துட்டகைமுனுவுக்கும், (இந்து) எல்லாளனுக்கும் இடையில் இடம்பெற்ற போரை, சிங்கள அரசியல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கென முன்னெடுக்கப்பட்ட ஒரு புனிதப் போராக சித்தரித்துக் காட்டுவதன் மூலம் மகாவம்ச ஆசிரியர் அந்தக் காரியத்தை கச்சிதமாக செய்திருக்கிறார்.

இவ்விதம், கௌதம சித்தார்த்தரின் பௌத்த மதத்தை, புதிய சமயக் கிரந்தமான, ஐந்தாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சம் சிங்கள பௌத்தமாக' மாற்றியமைத்தது என்கிறார் திசரணி குணசேகர.

இந்தப் பின்னணியில் புராதன கால வீரர்கள் மற்றும் மன்னர்கள் குறித்து மகாவம்சம் முன்வைக்கும் புராணக் கதைகள் சிங்கள பௌத்த மக்களுக்கு மத்தியில் பின்வரும் விதத்திலான ஓர் உணர்வைத் தூண்டியிருந்தன:

ஓர் உண்மையான இலங்கையராக இருக்க வேண்டுமானால், ஒரு சிங்களவராக இருக்க வேண்டும் உண்மையான ஒரு சிங்களவராக இருக்க வேண்டுமானால், ஒரு பௌத்தராக இருக்க வேண்டும்.

விருந்தோம்புபவர்கள் (சிங்கள பௌத்தர்கள்) மற்றும் விருந்தாளிகள் (ஏனைய சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள்) என்ற கருத்தாக்கம் இந்தத் தொன்மத்திலிருந்தே தோன்றியது. அதன் பிரகாரம், 'இந்தத் தீவு சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது அவர்களே அதன் அசல் உரிமையாளர்கள்' என்ற கருத்து சிங்கள மக்களின் பிரக்ஞையில் ஆழமாக வேரூன்றியது.

இதுவே மகாவம்ச மனோபாவம் (Mahawamsa Mindset) என அழைக்கப்படுகிறது. இதன் விளைவாக தமிழர்களும், முஸ்லிம்களும், சிங்கள கிறிஸ்தவர்களும் மற்றும் ஏனைய சிறுபான்மையினரும் ஒருபோதும் இலங்கையர்களாக இருந்து வர முடியாது என்ற நம்பிக்கை உருவாகியது. இந்த நம்பிக்கையே இன்றைய சிங்கள தேசியவாதத்தின் சாராம்சமாக இருந்து வருகின்றது.

1939ஆம் ஆண்டு ஜீன் மாதம் நாவலப்பிட்டி நகரில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் மிக மோசமான விதத்தில் இழிவுபடுத்தி ஜீ ஜீ பொன்னம்பலம் நிகழ்த்திய உரை, பல நூற்றாண்டு காலம் இலங்கையில் இனங்களுக்கிடையில் நிலவி வந்த நல்லுறவை முற்றிலும் சீர்குலைத்தது என எழுதுகிறார் சிங்கள தேசியவாதத்தின் தீவிர ஆதரவாளர் ஒருவர்.

அதன் விளைவாக சுதந்திரத்துக்குப் பின்பட்ட இலங்கையின் 75 வருட கால வரலாறு கண்ணீராலும், இரத்தத்தினாலும் எழுதப்பட வேண்டிய நிலை தோன்றியது என அவர் முத்தாய்ப்பாகச் சொல்கிறார்.

ஆனால் 1920களிலேயே சிங்கள பௌத்த சமூகத்துக்கு மத்தியில் இனவாத உணர்வுகளைத் தூண்டுவதற்கும், அவற்றை நிலைத்திருக்கச் செய்வதற்கும் அநகாரிக தர்மபால (1864 — 1933) முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார். அவருடைய எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் அவர் தொடர்ந்தும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் சிங்கள இனத்தின் எதிரிகளாகவே கட்டமைத்து வந்தார்.

Sri Lanka: War – Torn Island" (1998) என்ற நூலில் Lawrence J Zwier இப்படி எழுதுகிறார்: தமிழர்களும், சிங்களவர்களும் சுமார் 2000 ஆண்டு காலமாக இலங்கையில் பரம வைரிகளாக இருந்து வந்துள்ளார்கள் என்ற தப்பெண்ணத்தை ஜன ரஞ்சகப்படுத்திய மிக முக்கியமான தலைவர் அநகாரிக தர்மபால. அவர் பல சந்தரப்பங்களில் மகாவம்சத்தை மேற்கோள் காட்டியிருக்கிறார் அதில் எழுதப்பட்டி



ருக்கும் அனைத்து விடயங்களும் முற்றிலும் உண்மையானவை என்ற நிலைப்பாட்டிலிருந்தே அவர் அவ்வாறு கூறியிருக்கிறார்.... அவருடைய பெரும்பாலான பேச்சுக்களும், எழுத்துக்களும் இனவாத இயல்பிலானவை. சிங்களவர்கள் இன ரீதியில் தூய ஆரியர்கள் என்ற விடயத்தை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். சிங்களவர்களின் பூர்வீகம் வேறு, தமிழர்களின் பூர்வீகம் வேறு என்பது அவருடைய நிலைப்பாடு. அதனால், தமிழர்கள் சிங்களவர்களிலும் பார்க்க தாழ்வானவர்கள் என்று அவர் கூறினார்.

தர்மபாலவின் பரப்புரைகள் காரணமாக சுதந்திரத்துக்கு முன்னரேயே இந்த மகாவம்ச மனோபாவம் சிங்கள சமூகத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தது. இதற்கான சுவாரசியமான ஓர் உதாரணம் அசோகமாலா (1947) என்ற சிங்கள திரைப்படம்.

இரண்டாவது சிங்களப் படமான அசோகமாலா கோயம்புத்தூர் சென்ரல் ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்டது. வு சு கோபு என்ற தமிழர் அதன் இயக்குநர். 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் அப்படம் திரையிடப்பட்டது. அக்கால சிங்கள பத்திரிகைகள் 'அசோகமாலா' திரைப்படம் தொடர்பான விமர்சனங்களை கடும் இனவாதக் கண்ணோட்டத்தில் முன்வைத்திருந்தன. இது தொடர்பாக 'சரசவி சந்தரஸ' என்ற பத்திரிகை எழுதிய ஆசிரியர் தலையங்கம் இது:

''இப்பொழுது கொழும்பு திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டு வரும் 'அசோகமாலா' என்ற திரைப்படம் ஒட்டுமொத்த சிங்கள இனத்தின் மீதும் அவதூறு பொழிந்துள்ளது. மாவீரனும், சிங்கள பேரரசனுமான துட்டகைமுனு ஒரு கோழையாக, பலவீனமான மனிதனாக சித்தரிக்கப்படுவதைப் பார்த்து எந்தவொரு சிங்கள மகனும் மௌனமாக இருக்க முடியாது....''

''....புத்த சாசனத்தையும், சிங்கள இனத்தையும், சிங்களத் தீவையும் தமிழர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகப் பிறந்தவன் தான் மாவீரன் துட்டகைமுனு.... அந்தக் கால கட்டத்தில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் ஒரு பாரிய பிளவு நிலவி வந்தது. அதற்குப் பதிலாக அக்காலத்தில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையில் ஒரு சகோதரத்துவம் நிலவி வந்ததாகக் காட்டுவதற்கு இப்படத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி வெட்கக்கேடான ஒரு அவதூறு பொய் வரலாற்றை திசைதிருப்புவதற்கான ஒரு முயற்சி''.

ஆனால், மார்ட்டின் விக்ரமசிங்க (மயூ ரபாத என்ற புனைபெயரில்) எழுதிய விமர்சனம் இந்தப் பார்வைக் கோணத்தை முற்றிலும் நிராகரிக்கும் விதத்தில் வரலாறு குறித்த துல்லியமான ஒரு பார்வையை முன்வைத்தது:

சோழர் படையை முறியடித்த பின்னர் பௌத்த மதத்தின் கொடியின் கீழ் நாட்டை ஒற்றுமைப்படுத்திய மாவீரனாக இளவரசன் துட்டகைமுனுவை வரலாறு சித்தரிக்கின்றது. அவன் தமிழர்களுடன் நட்புறவைப் பேணுவதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில் ஒரு கீழ்மட்ட படையதிகாரி துட்டகைமுனுவுக்கு எதிராக கலகம் செய்தான் எனக் கூறுவது வரலாற்று ரீதியில் பொருத்தமற்றது.... நாட்டையும், மக்களையும் அடிமைப்படுத்தியிருந்த சோழர்களின் அந்நியப் படைகளுக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட போர் மகாவம்சத்தில் ஒரு சிங்கள — தமிழ் போராக குறிப்பிடப்படுகிறது.

அந்த ஆக்கிரமிப்புக்குத் தலைமை தாங்கிய சோழ மன்னன் கொல்லப்பட்டு, அவனுடைய படை முறியடிக்கப்பட்ட பின்னர், இந்நாட்டில் வாழ்ந்து வந்த சிங்களவர்களுக்கும், திராவிடர்களுக்குமிடையில் எத்தகைய பிரிவினைகளும் நிலவி வரவில்லை. இளவரசன் துட்டகைமுனுவின் காலத்தில் இடம் பெற்ற சோழ மன்னனின் ஆக்கிரமிப்பின் போது சிங்கள பௌத்தர்களும், தமிழ் பௌத்தர்களும் நசுக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அந்தப் பிளவு தோன்றியது. அந்நிய இராணுவம் முறியடிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் 'தீர்த்து வைக்கப்பட வேண்டிய சிங்கள — தமிழ் பிரிவினையொன்று இருந்து வரவில்லை.

1950களில் செல்வநாயகம் போன்றவர்கள் முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையையும், 1980 களில் எழுச்சியடைந்த தமிழீழ கோரிக்கையையும், அதனுடன் இணைந்த விதத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தையும் இந்த மகாவம்ச மனோபாவ கருத்தியலை பரப்புரை செய்வதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் சிங்களத் தேசியவாதிகள். எனவே, சுதந்திர இலங்கையின் எழுபத்தைந்து வருட கால வரலாறு 'கண்ணீராலும், இரத்தத்தினாலும் எழுதப்பட்டமைக்கு' பொன்னம்பலத்தைப் பார்க்கிலும், தர்மபாலவும், அவர் போஷித்து வளர்த்த (இனவெறுப்பு) தேசியவாதத்தை அதே விதத்தில் முன்னெடுத்து வரும் ('1956 இன் குழந்தைகள்' என தம்மை அழைத்துக் கொள்ளும்) சிங்கள தேசியவாதிகளுமே பொறுப்புக் கூற வேண்டும்.

சமகால இலங்கை அரசியல் சமூகத்தில் இந்த மனோபாவம் எந்தெந்த வழிகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அதில் மிக முக்கியமானது அரசியல் யாப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிவிசேட முக்கியத்துவம். அடுத்தது, அரச கரும மொழிகள் தொடர்பான அரசியல் யாப்பின் பிரிவு 18 (1) மற்றும் 18 (2) என்பவற்றில் தரப்பட்டிருக்கும் பின்வரும் விநோதமான வாக்கியங்கள்:

18.(1) இலங்கையின் அரச கரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்.

(2) தமிழும் அரசகரும மொழியாதல் வேண்டும்.

ஒரே வாக்கியத்தில் இதனை சொல்ல முடியாமல் போனது ஏன்? இதன் பின்னணியில் செயற்படும் நுட்பமான உளவியல் என்ன? ஓர் ஒப்பீட்டுக்காக அரச கரும மொழிகள் தொடர்பாக தென்னாபிரிக்க அரசியல் யாப்பு என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

தென்னாபிரிக்க அரசியல் யாப்பின் பிரிவு 6(1) ''குடியரசின் அரச கரும மொழிகள் Sepedi Sesotho Setswana....'' எனத் தொடங்கி பதினொரு மொழிகளை வரிசைப்படுத்துகிறது. ஆனால், பெருந்தொகையான பழங்குடி மொழிகளைக் கொண்ட அந்நாட்டின் குடித்தொகையில் ஆகக் கூடிய சதவீதத்தினர் (23%) பேசும் Isi Zulu என்ற மொழி அந்தப் பட்டியலில் கடைசியில் அதாவது, பதினோராவது ஸ்தானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு மக்களில் 16 சதவீதத்தினர் பேசும் இரண்டாவது பெரும்பான்மை மொழியான Isi Xhosa பத்தாவது இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய ஒரு நிலைமையை இலங்கையில் கற்பனை செய்து கூட பார்க்க முடியுமா?

தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படும் பொழுது தோன்றும் எதிர்ப்புக்களும், 'தமிழ் பௌத்தர்கள் இருந்து வந்துள்ளார்கள்' (22ம் பக்கம் பார்க்க)

# சீனா ஏன் தமிழர்களை நோக்கி வருகின்றது?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



சில தினங்களுக்கு முன்னர் சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது முன்னணி புத்திஜீவிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதி. நிதிகளை சந்தித்திருந்தார். சந்திப்பில் பங்கு கொண்டவர்கள் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் விடயங்களை முன்வைத்தனர்.

தமிழ் மக்களின் அரசியல் விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாட்டை தெளிவு படுத்துமாறு கோரினர். நாங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை எங்களுடைய வெளிவிவகாரக் கொள்கை தலையிடாக் கொள்கையாகும். இதுதான் சீனத் தூதுவர் தமிழ் பிரதிநிதிகளுக்கு வழங்கிய பதில்.

சந்திப்பில் பங்கு கொண்டவர்களில் முன்னணி அரசியல் சிந்தனையாளர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் சீனாவின் தலையிடாக் கொள்கை தொடர்பில் கேள்விகளை எழுப்பினர். அதுதான் சீனாவின் கொள்கை என்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எவ்வாறு நீங்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பக்கமாக நிற்கலாம்? அதனை எவ்வாறு தலையிடாக் கொள்ளை என்று கூறலாம்? இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினையில் சீனாவின் நிலைப்பாடு இஸ்ரேலுக்கு சாதகமாக இல்லை ஏனெனில் நீங்கள் 'இரண்டு அழகுகள்' தீர்வை ஆதரிக்கின்றிர்கள் ஆனால் இஸ்ரேலோ இரண்டு அரசுகள் தீர்வை எதிர்க்கின்றது. இவ்வாறான கேள்விகள் எவற்றுக்கும் சீனத்தூதுவர் பதிலளிக்கவில்லை. இவ்வாறான கேள்விகளுக்கு சீனாவிடம் பதில் இல்லை என்பது தான் உண்மை.

சீனா தொடர்பில் ஏன் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்? இலங்கைத்தீனில் அக்கறை செலுத்தி வரும் ஏனைய நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுண்டு. இதில் இந்தியா தனித்துவமானது. இந்தியாவை எந்தவொரு நாட்டுடனும் ஒப்பிட முடியாது. இது தொடர்பில் இந்தக் கட்டுரையாளரின் முன்னைய பத்திகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்தியா ஒன்று தான், தமிழ் மக்களுக்கு இலங்கையில் நியாயபூர்வமான அரசியல் உரித்துண்டு என்று கூறும் ஒரேயொரு நாடாகும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. அதே போன்று அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்குலக நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை பாதுகாப்பது தொடர்பில் தொடர்ந்தும் தங்களது கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றன. அமெரிக்க தூதுவர் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கின்றார். அவர்களது மனித உரிமைகள் சார்ந்த கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கின்றார்.

இதே போன்று ஏனைய மேற்குலக ராஜதந்திரிகளும் தமிழ் மக்களின் மனித உரிமை சார்ந்த கோரிக்கைகளுக்கு ஆதரவான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர். இந்த நாடுகள் எவையுமே நாங்கள் உள்நாட்டு வியகாரத்தில் தலையீடு செய்வதில்லை என்று பதியனிப்பதில்லை அவர்களது நிலைப்பாடுகளில் பாதிக்கப்பட்ட மக்கள் மீதான கரிசனை இருக்கின்றது.

ஆனால் தமிழ் மக்களை நோக்கி வரும் சீனாவிடம், தமிழ் மக்களின் அடிப்படையான கேள்விகள் எவற்றுக்குமே பதிலில்லை. தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சினை தொடர்பில் பதிலளிக்க முடியாத சீனா - ஏன் வடக்கு கிழக்கு நோக்கி வருகின்றது? இந்தக் கேள்வியை இந்தியாவை நோக்கியோ அல்லது அமெரிக்காவை நோக்கியோ, எவருமே முன்வைக்க முடியாது.



ஏனெனில் அவர்கள் தமிழ் மக்களின் நலன்கள் மீது கரிசனையுடன் இருக்கின்றனர். தமிழ் மக்களின் அனைத்து எதிர் பார்ப்புக்களையும் பூர்த்தி செய்ய முடியா விட்டாலும் கூட, தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சினைகளை அங்கீகரிக்கின்றனர். இதன் காரணமாகவே அரசாங்கத்திற்கு சில விடயங்களை ராஜதந்திர மொழியில் சுட்டிக்காட்டுகின்றனர்.

மகிந்த ராஜபக்லின் யுத்த வெற்றிவாத ஊழல் அரசாங்கத்தை பயன்படுத்தி தென்னிலங்கையில் காலூன்றிய சீனா, ஒரு தசாப்த காலத்திற்கு பின்னர், யுத்தத்தில் தோற்க்கப்பட்ட தரப்பான தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடத்தை நோக்கி வருகின்றது? வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடம் என்பதற்கான அங்கீகாரமும் இந்தியாவினால் கிடைக்கப் பெற்ற ஒன்று தான்.

வடக்கு கிழக்கின் நிலப்பரப்பில் கடலோரப் பகுதி பிரதானமானது. இதனை துல்லியமாக கணித்தே மீன் பிடித்துறையை சீனா தெரிவு செய்திருக்கின்றது. இதன் மூலம் நீண்டகால அடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதியில் மீன்பிடித் துறையின் ஆதிக்கம் செலுத்த முடியுமென்றே சீனா கருதுவதாக தெரிகின்றது. இந்த இடத்தில் ஒரு விடயத்தை குறித்துக் கொள்ள வேண்டும். பொருளாதார ரீதியில் நோக்கினால் இவ்வாறான சிறிய முதலீடுகளால் சீனாவிற்கு எந்தவொரு நன்மையும் இல்லை. அவ்வாறிருந்தும் சீனா வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆர்வம் காண்பிக்கின்றது என்றால், நிச்சயம் இதற்கு பின்னால் வேறு நலன்கள் உண்டு.

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதி யுத்தத்தின் போது தான், சீனாவின் உள் நுழைவுத் திட்டம் தீட்டப்பட்டது. இன்று நாங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை என்று கூறும், சீனா, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது, ராஜபக்ஷவின் போர் திட்டத்தை ஆதரித்தே உள் நுழைந்தது. இந்தியாவும் அமெரிக்காவும் தாக்குதல், ஆயுதங்களை வழங்குவதற்கு மறுத்த போது, அந்த இடத்தில் தான் சீனா அமர்ந்து கொண்டது. அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவே இதனை பகிரங்கமாக கூறியிருக்கின்றார். இந்தியா எங்களுக்கு ஆயுதங்களை தர மறுத்ததன் காரணமாகவே நாங்கள் சீனாவிடம் செல்ல வேண்டியேற்பட்டது.


ஒரு உள்நாட்டு யுத்தத்தின் போது, அரசிற்கு ஆதரவாக களமிறங்கிய சீனா, பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கும் போது, நாங்கள் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை என்று எவ்வாறு கூற முடியும்? இது ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, சீனாவின் அணுகுமுறையில் நேர்மையில்லை. முற்றிலும் அதன் நலன்கள் மட்டுமே மேலோங்கியிருக்கின்றது. இந்த இடமும் ஏனைய நாடுகளிலிருந்து சீனாவை வேறுபடுத்துகின்றது. அனைத்து நாடுகளுக்கும் நலன்கள் இருக்கின்றன. அது தவிர்க்கவும் முடியாதது. ஆனால் அவர்களது நலன்களுக்காக பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படையான அபிலாஸைகளை அவர்கள் நிராகரிக்கவில்லை. ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் இந்தியாவிற்கு பிரத்தியேக நலன்கள் உண்டு, குறிப்பாக ஒரு உடனடி அயல்நாடு என்னும் வகையில், இலங்கையின் மீது பிரத்தியேக அவதானம் உண்டு. ஆனால் இந்தியாவின் நலன்களுக்காக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை இந்தியா புறம் தள்ளவில்லை.

சீனா தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வரவில்லை. மாறாக, தமிழ் மக்களை ஒரு கருவியாகக் கொண்டு, இந்தியாவின் பாரம்பரிய செல்வாக்குப் பகுதிகளுக்குள் நுழைய முற்படுகின்றது. இதற்கு பாதிக்கப்பட்ட மக்களின் இயலாமையை பயன்படுத்திக் கொள்ள முற்படுகின்றது. அடிப்படையில் வடக்கு கிழக்கிற்குள் சீனா உள்நுழைவது இந்தியாவின் நலன்களுக்கு எதிரானது தான். இந்தியாவிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவது தான் சீனாவின் பிரதான திட்டம். இதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. இல்லாவிட்டால், சீனாவிற்கு எதற்காக தமிழ் பகுதிகள் மீது ஆர்வம் காண்பிக்க வேண்டும்? இதற்கு பின்னால் சீனாவின் பரந்த மூலோபாய திட்டம் உண்டு. சீனா ஒரு மேலாதிக்க கனவுடன் இயங்கிவரும் நாடு. ஆசியாவின் மேலாதிக்க சக்தியாக எழுச்சி கொள்வதே சீனாவின் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தியாவின் அயல் நாடுகளுக்குள் நிலவும் பொருளாதார நெருக்கடிகளையும் அரசியல் உறுதிப்பாடின்மையையும் பயன்படுத்தி, உள்நுழையும் திட்டத்தை வகுத்தது.

ராஜபக்ஷ குடும்பத்தின் எதேச்சாதிகார ஆட்சி, சீனாவிற்கு பழம் நழுவி பாலில் வீழ்ந்தது போன்ற வாய்ப்பை வழங்கியது. இந்தக்காலத்தில் தான் சீனா அதன் நீண்டகால நகர்வுகளுக்கான அனைத்து முதலீடுகளையும் மேற்கொண்டது. முதலீடுகள் என்பது, வெறுமனே நிதி ரீதியானது மட்டுமல்ல மாறாக, நீண்ட காலத்திற்கு பயன்படக்கூடிய அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது. எங்கு ஊழல் தலை விரித்தாடுகின்றதோ, எங்கு மக்களின் நலன் இரண்டாம் பட்டசமாக நோக்கப்படுகின்றதோ, எங்கு

(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தீர்மானிக்க வேண்டிய நிலையில் தமிழர் தரப்பு!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. பூ கோள அரசியலுக்கும் அது பொருத்தமானது தான். தமிழர் தரப்புக்கு இப்போது, சர்வதேச அரசியல் சக்திகளுடன் தொடர்புடைய இரண்டு விடயங்களில் யாரைச் சார்ந்து நிற்பது என்ற விடயத்தில் மாற்றுக் கருத்துக்கள் எழுந்திருக்கின்றன. காஸா மீது இஸ்ரேல் தொடுத்திருக்கும் தாக்குதல் முதலாவது.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு தமிழர்கள் எப்போதும், மானசீகமான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றனர். தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஆரம்பத்தில் பலஸ்தீன போராளிக் குழுக்களிடம் பயிற்சிகளையும் பெற்றிருக்கின்றன.

ஆனாலும் தமிழர்கள் இனஅழிப்புச் செய்யப்பட்டு, ஆயுதப் போராட்டம் கொடூரமாக நசுக்கப்பட்ட போது, பலஸ்தீனமோ, அந்த மக்களோ அதனை எதிர்க்கவில்லை. தமிழர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்குப் பதிலாக, மஹிந்த ராஜபக்ஷவுக்கு விருது வழங்கி கௌரவித்தது பலஸ்தீன அரசு.

இப்போது காஸா மீது தொடரப்படும் போர், அறத்துக்கு எதிரானது. நீதி, நியாயங்களுக்கு அப்பாற்பட்டது. அந்த வகையில் அப்போருக்கு எதிராகவே தமிழர்கள் இருக்க வேண்டும்.

ஆனால் தமிழர்கள் இனஅழிப்புச் செய்யப்பட்ட போது எங்களுடன் நிற்க மறுத்தவர்களுக்காக ஏன் கண்ணீர் சிந்த வேண்டும் என்று சிலரால் எழுப்பப்படுகின்ற கேள்வியின் நியாயம் புறக்கணிக்கத்தக்கது அல்ல.

இஸ்ரேலின் பக்கமே அமெரிக்கா நிற்கிறது. தமிழர்களுக்கு அமெரிக்காவோ மேற்குலகமோ நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என முழுமையாக நம்பிக்கை வைக்க முடியாது போனாலும், அவர்களை எதிர்க்காமல் இருப்பதே நல்லது என்கிறார்கள் அவர்கள்.

பலஸ்தீனர்களை ஆதரிப்பதால், தமிழர்களுக்கு எதுவும் கிடைத்து விடாது. தமிழர்களின் ஆதரவு கிடைத்து விட்டால் மாத்திரம் அவர்களால் வென்று விடவும் முடியாது. இதே தெரிவு தான் முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் நடந்து கொண்டிருந்த போது பலஸ்தீனர்களிடம் இருந்தது.

இஸ்ரேலை எதிர்க்காமல் இருப்பது மேற்குலகைப் பகைக்காமல் இருப்பதற்குச் சமம். அதனால் தான் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மதில் மேல் பூனையாக இருக்கின்றன. இது அறத்துக்கு முரணானது. ஆனால் அரசியலில் அறத்துக்கு முரணாவது இல்லை.

காஸா மீதான போரைக் கண்டித்த அதே வேளை, முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கும் அதுவே நேரிட்டது என்பதைச் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சித்தார்த்தன், சுமந்திரன் போன்றவர்களின் கருத்தை, மாற்று மொழி ஊடகங்கள், 'தமிழ் அரசியல்வாதிகள் இஸ்ரேலை ஆதரிக்கிறார்கள் என்றே எழுதுகின்றன.

பலஸ்தீனர்களுக்கு உள்ளதைப் போன்ற ஓர் அரசுக்கான அங்கீகாரம் கூட, தமிழர்களுக்கு இல்லை. எனவே, 'தமிழர்களைப் பொறுத்த வரையில் பலஸ்தீன விவகாரத்தில் அதிகம் மூக்கை நுழைக்க வேண்டியதில்லை. அதற்காக குத்திமுறியவோ, நண்பர்களைப் பகைவர்களாக்கிக் கொள்ளவோ வேண்டியதில்லை' என்ற கருத்தே பலரிடம் காணப்படுகிறது. அதில் நியாயங்களும் அதிகம்.

இதேபோன்ற இன்னொரு சிக்கலான சூழல் இப்போது தமிழர்களுக்கு தோன்றிக் கொண்டிருக்கிறது. தமிழர்கள் பாரம்பரியமாக நம்பிக் கொண்டிருக்கும், இந்தியாவா, புதிதாக கையை நீட்டுகின்ற சீனாவா என்ற கேள்விக்கு விடை தேட வேண்டிய சூழல் ஒன்று உருவாக ஆரம்பித்து விட்டது.

சீனத் தூதுவரின் அண்மைய வடக்குப் பயணம், தமிழர்கள் மத்தியில் இந்தியா தொடர்பாக இருந்து வந்த இறுக்கமான கருத்துக்களை சற்று அசைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டது. இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய நாடு சீனா.

போருக்குப் பின்னரும், பொறுப்புக்கூறல் அழுத்தங்களை சர்வதேச அளவில் இலங்கை எதிர்கொண்ட போது, அதனைக் காப்பாற்றுவதற்கு முன்னின்ற நாடு சீனா.

அப்போது தமிழர்கள் மீது கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாமல் இருந்த சீனா, இனஅழிப்பை வேடிக்கை பார்த்து தமிழர்கள் நீதி கோரிய போது அதனைப் பலவீனப்படுத்துவதற்கு பாடுபட்ட சீனா, இப்போது தமிழர்களுக்கு உதவுவதாக முன் வருகிறது.

'உங்களுடன் நாங்கள் நிற்போம்' என்கிறார் சீனத் தூதுவர். அவர் எந்தளவுக்கு தமிழர்களுடன் நிற்பார் என்பதில் எந்த தெளிவும் இல்லை. சிவில் சமூகப் பிரதிநிதிகள் சிலருடன் சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் சுமார் 2 மணி நேரத்தைச் செலவிட்டிருக்கிறார்.

அதன்போது தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் சீனாவின் தலையீடு குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு சீனத் தூதுவர் உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என்று மழுப்பியிருக்கிறார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய விரும்பாத சீனத் தூதுவர், ஏன் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத்தினரை சந்திக்க வேண்டும். உள்நாட்டில் நெருக்கடியில் உள்ள மக்களுக்கு உதவுவதாக வாக்குறுதி அளிக்க வேண்டும்?

வடக்கில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துவதற்கு சீனா விரும்புகிறது. அதற்குப் பிரதான காரணம் தமிழர்கள் மீது கொண்டுள்ள இரக்கமோ, அனுதாபமோ அல்ல. அவ்வாறான அனுதாபத்தை சீனா தமிழர்கள் மீது ஒரு போதும் கொண்டிருந்ததில்லை.

தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கின்ற இந்தியாவுடன் புவிசார் அரசியல் போட்டியில் ஈடுபட்டிருக்கிறது சீனா. அந்தப் போட்டியில் வெற்றியீட்டுவதற்கு சீனா எல்லா வாய்ப்புகள், தெரிவுகளையும் பயன் படுத்திக் கொள்கிறது. தன்னிடம் உள்ள பொருளாதார வளத்தையும், பலத்தையும் அதற்காக செலவிடுகிறது.

இந்தியாவுக்கு அருகில் இருக்கும் இலங்கையை முதலில் குறி வைத்து தனது இலக்கை அடைந்தது. இப்போது இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள வடக்கு, கிழக்கை குறி வைக்கிறது. இந்த நிலையில் சீனாவுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது, தமிழர்களுக்கு எந்த வகையில் சாதகமாக அமைய முடியும் என்ற கேள்வி உள்ளது.

இந்தியாவுடன் போட்டி போடுவதற்காக, அதனைப் பலவீனப்படுத்துவதற்காகவே சீனா தமிழர்களை நெருங்குகிறது என்று தெரிந்து கொண்டும், தமிழர் தரப்பு அதற்கு கை நீட்டுவது சரியானதா? தமிழர்களுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதனை தொப்புள்கொடி உறவு என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. பல நூற்றாண்டுகளாக நீடிக்கும் அந்த உறவை புறக்கணித்து விடுவது இலகுவானதல்ல. தமிழர்கள் பிரச்சினை வந்த போதெல்லாம், இந்தியாவிடம் ஓடியிருக்கிறார்கள். இந்தியாவும் தமிழர் விவகாரத்தில் தொடர்புபட்டிருக்கிறது. தலையிட்டிருக்கிறது. இதனை வைத்து அரசியல் செய்யும் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இணக்கமான உறவை புறக்கணித்துக் கொண்டு சீனாவை நெருங்குவது சுலபமல்ல. இந்தியாவினால் அதனை இலகுவில் சகித்துக் கொள்ளவும் முடியாது.

அதேவேளை, இந்தியா இந்தியா என்று ஓடி, தமிழர்களால் எதனைச் சாதிக்க முடிந்திருக்கிறது? இனப்படுகொலையை தடுக்க முடிந்ததா? அதற்கு இந்தியா கூடவே இருந்து உதவி செய்யவில்லையா என்று, கேள்வி எழுப்புபவர்களும் உள்ளனர்.

இனப்படுகொலை நடந்த போது இருக்கட்டும், புலிகள் மீதிருந்த வன்மத்தால் இந்தியா வாயைப் பொத்திக் கொண்டிருந்தது என்றே வைத்துக் கொள்ளலாம். இன்றைக்கும் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு இல்லை, பௌத்தமயமாக்கல், நில ஆக்கிரமிப்பு என்று நெருக்கடிகள் தொடர்கின்றன.

ஆனாலும் இந்தியா தலையிடவில்லை. தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தியப் பிரதமரைச் சந்திக்க தமிழ் அரசியல் தலைவர்கள் கடிதத்துக்கு மேல் கடிதம் அனுப்புகிறார்கள். ஆனால் அது கூட அவரது கைக்குக் போய்ச் சேரவில்லை என்று கூறுகிறார் சி.வி.விக்னேஸ்வரன்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் அழுத்தங்களை கொடுக்கள் என்று இந்தியாவிடம் கெஞ்சிப் பார்த்து களைத்துப் போய் விட்டார்கள் தமிழ்த் தலைவர்கள். அவர்களுக்கு இந்தியாவிடம் இருந்து கிடைத்த பதில் தான் என்ன?

இந்தியா சில நலத் திட்டங்களை வடக்கு கிழக்கில் முன்னெடுத்திருந்தாலும், தமிழர்களின் அரசியல் நலன்களை உறுதி செய்யும், உரிமைகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கும் விடயத்தில் கொழும்பை பகைத்துக் கொள்ளாத வகையிலேயே செயற்படுகிறது.



கொழும்பை பகைத்துக் கொண்டால், சீனாவுடன் நெருங்கி விடும் என்று தமிழர்களை எட்டவே வைத்திருக்கிறது இந்தியா. ஆனால், இலங்கை அரசாங்கமோ இந்தியாவுக்கு வாலாட்டி விட்டு சீனாவுடன் உறவை வலுப்படுத்துகிறது. ஆனாலும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வை வழங்க கூடிய அழுத்தங்களைக் கொடுக்க இந்தியா தயாராக இல்லை.

இவ்வாறான இந்தியாவை தமிழர்கள் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பது சரியானதா என்ற கேள்வியை எழுப்புகின்றவர்கள் பலர். இந்தியாவுடன் உள்ள நீண்ட நெடிய உறவை முறித்துக் கொள்வது அறம் அல்ல.

ஆனால், பூகோள அரசியல் என்று வந்து விட்டால், ஒவ்வொருவரும் தங்களின் நலன்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள். இந்தியா தனது நலன்களையும், சீனா தனது நலன்களையும் மாத்திரம் முன்னிறுத்திச் செயற்படுகின்ற போது தமிழர்கள் மட்டும் ஏன் தங்களின் நலன் சார்ந்து தீர்மானங்களை எடுக்காமல் இருக்க வேண்டும் என எழுப்பப்படும் கேள்வியில் நியாயம் உள்ளது. தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்தியாவை பகைத்துக் கொள்ள விரும்பாதவர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூட, சீனாவை வைத்து இந்தியாவை அச்சுறுத்தும் பாணியில் நாங்கள் செயற்பட மாட்டோம், இந்தியாவே எங்களின் நிரந்தர நண்பன் என்று கூறியிருக்கிறார். இவ்வாறான கண்மூடித்தனமான முடிவுகளும் தீர்மானங்களும் தமிழர்களுக்கு இதுவரை உருப்படியான எதையாவது பெற்றுக் கொடுத்திருக்கிறதா? இது சிந்திக்க வேண்டிய விடயம்.

இந்தியாவின் பாரம்பரிய நட்பு நாடுகளாக இருந்த நேபாளம், பூட்டான் போன்றவை கூட இப்போது சீனாவைச் சார்ந்து முடிவுகளை எடுக்கத் தொடங்கி விட்டன. காரணம், பூகோள அரசியலில் அந்த நாடுகளை இந்தியா பயன்படுத்திக் கொண்டளவுக்கு, இந்தியா அந்த நாடுகளுக்கு உதவவில்லை.

நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளே அவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் போது, தமிழர்கள் மட்டும் ஏன் இந்தியாவின் வாலில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்? இந்தியாவோ, சீனாவோ தமிழர்களின் நலன்களை உறுதி செய்யும் தரப்புகளாக இல்லை என்பது துரதிஷ்டம். ஆனால் இந்த நிலை நீடித்திருக்கும் என்று கூறமுடியாது.

அவ்வாறானதொரு தருணம் வாய்க்கும் போது தமிழர்கள் எப்போதும் போல தங்கள் பக்கம் தான் நிற்பார்கள் என்று இந்தியா எதிர்பார்க்க கூடாது. ஏனென்றால் அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை எதிரிகளும் இல்லை.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
31வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2024
21 ஏப்ரல் 2024

# சீனாவின் தலையிடா வெளியுறவுக் கொள்கையும் அதன் போலித் தன்மையும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



இலங்கைத்தீவின் அரசியலில் வடக்கு கிழக்கு மூலோபா யரீதியில் பிரதான இடத்தை வகிக்கிறது. அதனை நோக்கி தென் இலங்கை ஆட்சியாளர் மட்டுமன்றி வல்லரசு நாடுகளும் அவற்றின் நகர்வுகளும் முக்கியத்துவம் பெறுவதனைக் காண முடிகிறது. அந்த வகைக்குள்ளேயே இலங்கைக்கான சீனத்தூதுவரது வடக்கு நோக்கிய வருகை அமைந்துள்ளது எனலாம்.

இலங்கைத் தீவு இந்தியாவுக்கு அண்மையிலிருப்பதென்பது வடக்கு கிழக்கு, சார்ந்ததால் ஏற்பட்ட புவியியல் நெருக்கத்தால் ஏற்பட்டதென்றாகும். தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழும் பிரதேசம் தென் இலங்கையோடு ஒப்பிடும் போது மூலோபாய ரீதியில் முக்கியம் பெற்ற நிலப்பகுதியாகும். அதற்கான தனித்துவத்தை பாக்கு நீரிணை கொடுக்கின்றது என்பது கருத்தில் கொள்ள வேண்டிய இன்னோர் பிரதான அம்சமாகும்.

அதனாலேயே இந்தியர்கள் இலங்கை அரசியல் பொருளாதார மற்றும் இராணுவ அம்சங்களில் கவனம் கொள்கிறார்கள். இந்தியா இலங்கைத் தீவை நோக்கி நகரவும் பிறசக்திகள் இந்தியா நோக்கிய பாதுகாப்புச் சார்ந்த அணுகுமுறைக்கும் வடக்கு கிழக்கின் புவிசார் அமைவிடமே பிரதான காரணமாக தெரிகிறது. பிரிட்டின். இந்தியாவின் அணுகுமுறை அவ்வாறே கட்டமைக்கப் பட்டிருந்தது.

இக்கட்டுரையும் ,லங்கைக்கான சீனத்தூதுவரது வடக்கு நோக்கிய வருகை ஏற்படுத்தியுள்ள அரசியலை தேடுவதாக அமையவுள்ளது. இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீசென் ஹொங் நான்கு நாள் பயணமாக வடக்கு மாவட்டங்களுக்கு வருகை தந்திருந்தார். அவரது வருகையின் போது வடக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் புதிய அபிவிருத்தித் திட்டங்களை முன் வைக்கும் நகர்வுகளிலும் கவனம் செலுத்தியிருந்தார். குறிப்பாக சீன – இலங்கை பௌத்த நட்புறவுத் திட்டத்தின் கீழ் அத்தகைய நிவாரணப் பொதிகள் வவனியா மன்னார் கிளிநொச்சி முல்லைத் தீவு மற்றும் பாழ்ப்பாண மாவட்டங்களில் சீனத் தூதுவரால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் சீன அரசாங்கம் வடக்குக்கு மட்டும் 155 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் அது தனித்து நிவாரணம் மட்டுமல்லாது வடக்கு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான வலைகள் வழங்குவதோடு மீதி பணத்தை வீடமைப்புத் திட்டங்களுக்கு வழங்குவதெனவும் தெரிவித்தார்.

இதேநேரம் வடக்குக்கு வருகை தந்த சீனத் தூதுவரை சிவில் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வர்த்தக பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடினர். அப்போது வடக்கு கிழக்குக்கான பொருளாதார உதவிகளை முதன்மைப் படுத்திய தூதுவர் அத்தகைய திட்டங்களை சீனா தொடர்ந்து வழங்குவதோடு முதலீட்டு நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

அப்போது சிவில் தரப்பினர் தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லாத போது எந்த பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களாலும் பயனடையப் போவதில்லை எனவும் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் எனவும் அதற்கான அழுத்தங்களை சீன அரசு தென் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தனர். இலங்கை பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது பாரிய உதவிகளை சீனா வழங்கியது என குறிப்பிடும் சீனத்தூதுவரிடம் இனப்பிரச்சினையை தீர்க்குமாறு அழுத்தம் கொடுக்க முடியுமென சிவில் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர். உலகளாவிய பொருளா தாரத்தில் இரண்டாவது நிலையிலுள்ள சீனா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையுடையது மட்டுமல்லாது உலகளாவிய அரசியலில் அதிக கவனம் செலுத்தும் சீன இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் கவனம் கொள்ளாமல் இருப்பது ஏன் என்ற கேள்வி சீனத் தூதுவரிடம் முன் வைக்கப்பட்டது. பாலஸ்தீன – இஸ்ரேலிய முரண்பாட்டுக்கு இரு நாட்டுத் தீர்வை சிபார்சு செய்துள்ள சீனா இலங்கைத்தீவின் நீண்ட இனப் பிரச்சினையில் கவனம் செலுத்தாது நிவாரணங்களை வழங்குவதால் எத்தகைய மாற்றமும் ஏற்படப் போவதில்லை என சிவில்



பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இவை அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும் போது சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது எனத் தெரிவித்தார். சீனத்தூதுவர் அவ்வாறு கூறுவது சரியானதா என்ற சந்தேகம் எல்லோரிடமும் உண்டு. அதனை ஆழமாக உரையாடுவது அவசியமானது.

முதலாவது சீனாவின் வெளியுறவுக் கொள்கையானது அரச இறைமையை பிரதிபலிப்பதாக உள்ளது. அது மக்கள் இறையாண்மைக்கோ, தேசிய அரச இறைமைக்கோ உட்படாத கொள்கையைக் கொண்டது. தற்போதும் புராதன மரபுக்குட்பட்ட இறைமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வெளியுறவையே பிரதிபலிக்கிறது. ஆனால் அத்தகைய அரசிறமையானது சீன அரசின் மேலான அதிகாரத்தை மட்டுமே குறிக்கிறது.

வெளித் தோற்றத்தில் சோஸலிஸம், கம்யூனிஸம் என்பதெல்லாம் அதன் தோற்றப்பாட்டு தேசியமாகவே தெரிகிறது. அடிப்படையில் அதற்கான அர்த்தத்தை கொடுக்குமளவுக்கு செயல்பாடு அமையவில்லை. ஐரோப்பியர்கள் இறைமைக் கோட்பாட்டில் நான்கு யுகங்களை கடந்து விட்டார்கள். மன்னனிடம் இறைமை, அரசிடம் இறைமை, தேசிய அரசிடம் இறைமை தற்போது மக்களிடம் இறைமை என்ற வளர்ச்சியை உலகம் அடைந்துள்ளது.

சீனாவோ இன்றும் புராதன யுகத்திலேயே அரச தத்துவங்களைக் கொண்டுள்ளது. இதற் கூடாக ஆட்சியாளர்கள் மறைந்து செயல்பட வழி கிடைத்துள்ளது. அத்தகைய வழியைப் பாதுகாப்பதிலும் சீன ஆட்சியாளர்கள் முன்னின்று செயல்படுகின்றனர். இதனாலேயே சீனாவின் வெளியுறவு ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்கிறது.

இரணடாவது, சீனா 1948ஆம் ஆண்டு முதல் பாலஸ்தீன பாகப்பிரிவினைத் திட்டத்தை ஆதரித்துள்ளது. அப்போது ஷீ யாங்கை – சேக்கின் (Chiang Kai- Shek) தலைமையிலான சீனாவின் ஆதரவு பாலஸ்தீனத்திற்கு இருந்தது. ஏறக்குறைய பின் வந்த காலம் முழுவதும் பாலஸ்தீனம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை முன்வைத்த 181 ஆவது தீர்மானத்தின் கீழ் உள்ள பாகப்பிரிவினைத் திட்டத்தை (Partition plan) பாதுகாப்பச் சபையின் ஏனைய நாடுகளைப் போன்று சீனாவும் ஏற்று அங்கீகரித்திருந்தது.

அதாவது இரு நாட்டுத் தீர்வுத் திட்டத்தை அனைத்து பாதுகாப்புச் சபை நாடுகளும் அங்கீகரித்திருந்தன. அண்மையில் பாலஸ்தீன ஜனாதிபதி சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது (யூன்12) பாலஸ்தீன சுயாட்சிக்கான கோரிக்கையை சீனா அங்கீகரித்தேயிருந்தது. வடக்குக்கு வருகை தந்திருந்த சீனத் தூதுவர் பலஸ்தீனாவில் மனித உரிமை மீறப்படுவதையும் மேற்கு நாடுகளின் நடவடிக்கையையும் கட்டிக் காட்டுகின்றார். அங்கு நிகழ்வது மேற்குலகத்தின் போர் என்பது நியாயமானதே. மனித உரிமை மீறப்படுகின்றது என்பது சரியானதே. அதுவே முள்ளிவாய்க்காலிலும் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்காலில் உலகமே ஒன்றிணைந்து போர் செய்தது. பாலஸ்தீனத்தில் மேற்குலகம் போர் செய்கிற போது உலகம் பார்த்துக் கொண்டிருகிறது. இது மட்டுமே இரு போருக்குமான வேறுபாடு. இரண்டுமே ஏறக்குறைய ஒன்றாகவே தெரிகிறது. ஈழத்தமிழர் மீதான மனித உரிமை மீறலுக்கு சீனாவும் பொறுப்புடையது. கம்யூனிஸத்தின் பெயரால் தினமென் சதுக்கத்தில் மீறப்பட்ட தும் மனித உர்மை மீறல் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது சீனா தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்த பின்னர் 99 வருடத்திற்கு குத்தகைக்கு பெறுகிறது. பாகிஸ்தானில்–குவாடர், இலங்கையில் – ஹம்பாந்தோட்டை, வங்களாதேஷில்– சிட்டங்கொங், மியான்மாரில்–சிற்கவே போன்ற துறைமுகங்களை விருத்தி செய்ததோடு குவாடர், ஹம்பாந்தோட்டையை ஏற்கனவே 99 வருட குத்தகைக்கு பெற்றுள்ளது. இது சீனாவின் பொருளாதாரக் கொள்கையாக மட்டுமல்லாது அரசியல் மற்றும் ,ராணுவ நடவடிக்கையில் ஒன்றாகவும் காணப்படுகிறது. அந்த நாடுகளுடன் உடன்பாடு மேற்கொண்ட பின்னரே அத்தகைய குத்தகையை சீனா கைப்பற்றுகிறது என்றாலும் அதன் அடிப்படை தலையீடாகவே தெரிகிறது.

சர்வதேச அரசியலின் தந்தை என அழைக்கப்படும் ஹான்ஸ் மோகன்தோ குறிப்பிடும் போது ஓர் அரசு தனது நாட்டின் எல்லைக்கு வெளியே நிகழ்த்துகின்ற அனைத்து நடவடிக்கையும் அந்த நாட்டின் அதிகார. த்தை மையப்படுத்தியதாகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார். அதிகாரத்திற்கான போராட்டமே சர்வதேச அரசியல் என்கிறார் மோகன் தோ. அவ் வகையான செய்முறையினையே சீனா உலகளாவிய தளத்தில் மேற்கொள்கிறது. பாதை மற்றும் பட்டிக்கான முன் முயற்சியானது

உலகளாவிய ரீதியில் நாடுகளை வர்த்தக ரீதியில் ஒன்றிணைப்பதாகும். அத்தகைய பொருளாதார ஒன்றிணைப்பானது இன்னோர் நாட்டின் மீது சீனாவின் தலையீடாகவே உள்ளது. இதனை தலையீடிற்ற செய்முறையென விவாதித்து விட முடியாது. அது ஏமாற்றுத்தனத்தின் விம்பமே அன்றி யதார்தமான புலமைசார் உரையாடலல்ல. சீனாவின் Market Bomb Win-Win Strategy Soft Power அனைத்துமே உலகளாவிய கொள்கைகளே. அவை ஒவ்வொன்றும் சீனா பிற தேசங்களின் மீது தலையீடு செய்கின்றதையே குறிக்கின்றது. நன்கொடையும், முதலீடும், பொருளாதார உதவிகளும் மற்றும் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளும் தலையீடாகவே உள்ளன. முதலீட்டினால் கிடைக்கும் இலாபங்களும் ஒத்துழைப்பால் கிடைக்கும் நன்மைகளும் தலையீடாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் மட்டும் தலையீடு இலங்கையில் மேற்கொள்ளவில்லை. அனைத்து நாடுகளும் இலங்கைக்குள் தமது தலையீட்டை நிகழ்த்துகின்றன. முதலாளித்துவம் சுரண்டினால் மட்டம் சுரண்டலல்ல. சீனா சுரண்டினாலும் அது சுரண்டல் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நான்காவது, சீனா கம்யுனிஸ நாடு எனக் கூறிக் கொண்டு இராணுவ ஆட்சி நாடுகளுடனும் சர்வாநிகார சக்திகளுடனும் ஏகாதிபத்திய நாடுகளுடனும் நெருக்கமான உறவைப் பேணுவது மட்டுமல்ல அந்த நாடுகளை பாதுகாத்து வருகிறது. ஐ.நா. வின் பாதுகாப்புச் சபையில் வீட்டோவை பிரயோகிப்பதோடு சர்வதேச தளத்தில் அத்தகைய நாடுகளை முதன்மைப்படுத்தியும் வருகிறது. இது சீனாவின் கம்யுனிஸத்தின் போலித் தன்மையை காட்டுவது மட்டுமன்றி உலகளாவிய கொள்கையின் தன்மையையும் காட்டுகிறது.

ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரச்சினையில் சீனா கவனம் கொள்வதை கொள்கையாகக் கொண்ட நாடு கிடையாது. அதனை ஈழத்தமிழர் மீதான இறுதிக் கட்டப் போரில் கண்டு கொள்ள முடிந்தது. இதனாலேயே சீனா தனது நாட்டின் எல்லைக்குள் கம்புனிஸம் என்று கூறிக் கொண்டாலும் உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய அரசாகவே இயங்குகிறது. அமெரிக்கா உட்பட்ட மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் இந்தியா எவ்வாறு உலகளாவிய கொள்கையைக் கொண்டிருக்கிறதோ அதே கொள்கையையே சீனாவும் கடைப்பிடிக்கிறது. ஆனால் தன்னை கம்யுனிஸ நாடு என அழைப்பது அதிகம் வேடிக்கையான அரசியலாகவே உள்ளது.

ஐந்தாவது, இலங்கைத்தீவின் அம்பாந் தோட்டை மட்டுமல்ல கொழும்பு துறைமுக நகரம் ஒன்றினை கட்டமைத்து புதிய நாடாக பிரகடனப்படுத்த முனைகிறது. கடன் பொறி பற்றிய உரையாடல் ஒரு புறம் அமைய மறுபக்கத்தில் கொழும்பு துறைமுக நகரத்தை உருவாக்கி அதில் கிடைக்கும் இலாபத்தைப் பற்றி மட்டுமல்ல அதனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா தனது ஆதிக்கத்தை வளர்த்தெடுக்க முயலுகிறது. இத்தகைய செய்முறை எதனையும் தலையீடு என்று கூற முடியாதா என்ற சந்தேகம் தவிர்க்க முடியாது. இதனூடாக இலங்கையின் அரச இறைமை பாதிக்கப்படுவதுடன் சுதேச மக்களின் இருப்பு அதிக அசௌகரியங்களுக்கு உள்ளாகிறது. முள்ளிவாய்க்காலில் தென் இலங்கை ஆட்சியாளர்களது இராணுவ நடவடிக்கைக்கு உந்துதலாக இருந்த நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். ஒரு இலட்சத்து நாப்பத்தாறாயிரம் மக்கள் கொல்லப்பட்டத்திற்கு பின்னால் இந்தியா அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல சீனாவும் ஒரு பங்குதாரர் என்பதை மறுக்க முடியாது. எனவே சீனாவின் தலையிடாத வெளியுறவுக் கொள்கை என்பது நியாயபூர்வமான வாதமாக கொள்ள முடியாதுள்ளது. வெளிப்படையாக உலகத்தை சீனா தலையீட்டின் மூலமே பொருளாதார இராணுவ நகர்வுகளை சாத்தியப்படுத்துகிறது. இயற்கையான கடலைக் கூட தலையீட்டினால் ஆக்கிரமித்து வருகிறது. தென்சீனக் கடலிலும் இலங்கையிலும் ஏற்படுத்திய Man Made Island என்பன இயற்கை மீதான தலையீட்டின் வெளிப்பாடேயாகும். இதனை மறைப்பதற்கே சீனா உலகத்திற்கு முன்னே தலையிடா வெளியுறவுக் கொள்கை என நியாயப்படுத்திக் கொள்ள முயலுகிறது. ஆனால் நடைமுறை அதுவல்ல. சீனா வலுவான வல்லரசாகவும் ஏகாதிபத்திய சக்தியாகவும் விரைவில் எழுச்சியடைய முனைகிறது. சீனாவின் கம்யூ னிஸமும் தலையிடா வெளியுறவும் கேள்விக்குரியதே.

# ராஜீவ்காந்தி கொலையில் தண்டனை விதிக்கப்பட்ட நால்வர் இன்னமும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைப்பு?



ராஜீவ்காந்தி படுகொலையில் தண்டனை விதிக்கப்பட்ட நால்வர் முன்கூட்டியே விடுதலையாகி ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள போதிலும் அவர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு அவர்களை நாடு கடத்துவதற்கான உத்தரவு தாமதமாவதன் காரணமாகவே அவர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமிலிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

முருகன் சாந்தன் ஜெயக்குமார் ரொபேர்ட் பயஸ் ஆகிய நால்வரும் அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான உத்தரவு வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகத்திலிருந்து கிடைக்கும் வரை சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருப்பார்கள் என முகாமிற்கான பொறுப்பதிகாரியும் மாவட்ட கலெக்டருமான எம் பிரதீப் குமார் கடந்த வருடம் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகத்திலிருந்து இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எங்களிற்கு அனுமதி கிடைத்ததும் நாங்கள் அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

முருகன் சாந்தனிற்காக ஆஜரான சட்டத்தரணி புகழேந்தி இது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர்கள் விடுதலையான பின்னரும் இன்னமும் திருச்சி முகாமில் இருக்க வேண்டியதற்கான விசேட காரணங்கள் எதுவுமில்லை என குறிப்பிட்டார். ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர்கள் சில மாதங்களிற்கு முன்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் ஆனால் இவர்கள் விவகாரம் இன்னமும் தொடர்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான உத்தரவு தாமதமாவதை கண்டித்துள்ள தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தியாகு கடந்த காலங்களில் வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகம் ஒரு நடைமுறை அமைப்பாக காணப்பட்டது ஆனால் தற்போது அது அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களை சட்டபூர்வமாக அவர்களின் நாடுகளிற்கு திருப்பி அனுப்பவேண்டும் ஆனால் தெரிவிக்கப்படாத காரணங்களிற்காக இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவது தாமதமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

முருகன் தனது மகளுடன் வசிப்பதற்காக லண்டன் செல்ல விரும்புகின்றார், சாந்தன் தனது தாயுடன் இலங்கையில் வசிக்க விரும்புகின்றார் ஏனைய இருவரும் நெதர்லாந்து செல்ல விரும்புகின்றார்கள் என தெரிவித்துள்ள புகழேந்தி இந்த நால்வரும் பொலிஸாரின் 24 மணிநேர கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏன் அங்கு பொலிஸார் தேவை அவர்கள் சிறையில் அனுபவித்த கட்டுப்பாடுகளை விட சிறப்பு முகாமில் கடும் கட்டுப்பாடுகளை அனுபவிக்கின்றனர் எனவும் புகழேந்தி தெரிவித்துள்ளார்.


சிறப்பு முகாம் எங்கள் கட்டிடத்தின் அருகில் உள்ளது ஆயுதமேந்தி பொலிஸார் அதற்கு பாதுகாப்பு வழங்குகின்றனர் பொலிஸார் எங்கள் கட்டிடத்திற்குள் அனுமதியின்றி நுழைகின்றனர் முகாமின் சுவருக்கு அருகில் ஆறு பொலிஸார் பாதுகாப்பு பணியில் வழமையாக ஈடுபடுகின்றனர் அவர்கள் எங்கள் கட்டிடத்திற்குள் நுழைவதற்கு அனுமதியில்லை துப்பாக்கி தவறுதலாக வெடிக்கலாம் என நாங்கள் அச்சமடைகின்றோம் என திருச்சி சிறைத்துறை பயிற்சி பள்ளியின் துணைமுதல்வர் ஜே மோகன் குமார் தெரிவிக்கின்றார்.

எனினும் கலெக்டர் பிரதீப் குமார் இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்தார். நால்வரும் முகாமில் சுதந்திரமாக உள்ளனர், முகாமில் உள்ள ஏனைய 56 பேரை போலவே இவர்களை நாங்கள் நடத்துகின்றோம் முகாமிற்கே நாங்கள் பொலிஸ் பாதுகாப்பை வழங்கியுள்ளோம் இவர்களிற்கு இல்லை என அவர் குறிப்பிட்டார்.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**31வது ஆண்டு விழா**
**சங்கீத சங்கமம் 2024**
**21 ஏப்ரல் 2024**


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START




Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# ஹமாஸின் சுரங்கப் பாதையை அழிக்க நுரை குண்டு வீசிட இஸ்ரேல் தீவிரம்!

உலகை வியப்புக்குள்ளாக்கிய ஹமாஸின் இரகசிய சுரங்க போர்முறை (Secret Tunnel Warfare) பற்றி தற்போது தகவல்கள் பல வெளியாகின்றன. ஹமாஸ் அமைத்த இரகசிய சுரங்க நகரம் 260 அடி ஆழமாகவும் 500 கி.மீ. தொலைவுக்கு நீள்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

காசா பகுதியின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன என்றும், இதில் பல்வேறு சுரங்க பாதைகள் எகிப்து வரை நீள்கின்றன என அமெரிக்க, இஸ்ரேலிய உளவுத் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

2021ம் ஆண்டில் ஹமாஸின் 100 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சுரங்கத்தை தாங்கள் அழித்து விட்டோம் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. இந்த ஆக்கம் ஹமாஸின் சுரங்கம் பற்றி அலசும் சிறிய வரலாற்றாய் வாகும்.

இந்த சுரங்கப் பாதைக்குள் பிரம்மாண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் தான் இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர் எனவும் கூறப்படுகிறது. இதனால் சுரங்கப் பாதை என்று கூறுவதை விட சுரங்க நகரம் என்றே அழைக்கலாம்.

தரவுகளின் படி ஹமாஸ் போராளிகளின் ஆயுத கிடங்குகளும் சுரங்கப் பாதையில் உள்ளன. அவற்றில் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலான சுரங்கப் பாதைகள் சிலந்தி வலை பின்னல் போல கட்டப்பட்டு உள்ளன.

இந்த பாதைகள் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்பது ஹமாஸ் அமைப்பினர்க்கு மட்டுமே தெரியும். வீடுகள், மசூதிகளில் சுரங்கப் பாதைகளின் நுழைவு வாயில்கள் உள்ளன.

ஹமாஸ் தலைமை அலுவலகமும் சுரங்க நகரத்தில் செயல்படுகிறது. சிறிய மருத்துவமனை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஜெனரேட்டர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சுரங்க நகரத்தில் இருக்கின்றன.

முன்பு இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையால் காசா பகுதிக்கான அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் முழுமையாக தடைபட்டிருக்கிறது. ஆனால் ரகசிய சுரங்கப் பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து காசாவுக்கு குடிநீர், உணவு, எரிபொருள், ஆயுதங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து கடத்தி வரப்படுகின்றன. இதன் காரணமாகவே ஹமாஸ் அமைப்பால் தொடர்ந்து போரில் ஈடுபட முடிகிறது.

மெக்ஸிகோவில் இருந்து அமெரிக்காவுக்கு சுரங்கப்பாதை வழியாக போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த சுரங்கப் பாதைகளை அமைக்கவும் ஹமாஸ் தீவிரவாதிகளே உதவி செய்துள்ளனர் என அமெரிக்க இஸ்ரேலிய உளவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு காலத்தில் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சுரங்கங்கள் தற்போது கட்டுப்பாட்டு அறை, போர் ஆலோசனைகள், ஆயுத கிடங்கு போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படும் அதிநவீன சுரங்கமாக மாறியிருக்கிறது. இத்தனை இரகசியங்களை வைத்திருக்கும் ஹமாஸின் சுரங்கப்பாதை உண்மையில் எவ்வளவு நீளம், அகலம் போன்றவை எல்லாம் சர்வதேச உளவு அமைப்பிற்கே தெரியாத புதிராக இருந்து வருகிறது.

காசா பகுதியில் ஹமாஸ் தொடர்புடைய இடங்களில் தற்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. தற்போது காசா பகுதியில் தரை வழியாக தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப் படுத்தியுள்ளது.

ஹமாஸின் சுரங்கப் பாதைகள் இஸ்ரேலுக்கு பெரும் சவாலாக இருப்பதனால், இந்த சவாலை எதிர்கொள்ள நுரை குண்டுகளை இஸ்ரேல் தயார் செய்துள்ளது. இந்த குண்டுகளில் வெடிபொருட்கள் கிடையாது. அதற்குப் பதிலாக பல்வேறு வகையான இரசாயனங்கள் உள்ளன. ஹமாஸின் சுரங்கப் பாதையை கண்டு பிடித்து உடன் அதன் நுழைவு வாயில்



களில் நுரை குண்டுகள் வீசப்படும். இந்த குண்டுகளில் இருந்து நுரை வெளியாகி சுரங்கப் பாதைகளை முழுமையாக அடைத்து விடும். சுரங்கப் பாதை க்குள் இருக்கும் ஹமாஸ் போராளிகளால் வெளியேற முடியாது. அவர்களால் எதிர் தாக்குதல் நடத்தவும் முடியாது. சுரங்கத்துக்குள்ளேயே அவர்கள் மரணிக்கும் சூழல் ஏற்படும் என இஸ்ரேல் கணிப்பிட்டுள்ளது. ஹமாஸின் சுரங்க நகரத்தை அழிக்க மற்றொரு திட்டத்தையும் ஆலோசித்து வருகிறதாக இஸ்ரேல் கூறியுள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து மோட்டார் பம்புகள் மூலம் ஹமாஸின் சுரங்க பாதைகளில் தண்ணீரை செலுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. சுரங்க நகரம் தண்ணீரில் மூழ்கினால் ஹமாஸின் முதுகெலும்பு உடைந்து விடும் என இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையேயான போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹமாஸ் படைக் குழுவின் சுரங்கம் சிறிது சிறிதாக இஸ்ரேலால் தகர்க்கப்படுவது தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.

வான்வழி தாக்குதல், கடல்வழி தாக்குதல், தரைவழி தாக்குதல் என்று கேள்விப் பட்டிருந்தாலும், நிலக்கீழ் தாக்குதல் அதாவது சுரங்கம் மூலம் தாக்குதல் நடத்துவது எதிரி படையை துவம்சம் செய்யும் யுத்தியாக இருக்கும் என்றும் முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

ஹமாஸ் கடந்த 7-ம் தேதி இஸ்ரேல் மீது போர் தொடுத்தது. பின்னர் இருதரப்புக்கும் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. ஹமாஸ் அமைப்பின் தாக்குதலைத் தொடர்ந்து, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு மாதத்தைக் கடந்துள்ளது. வடக்கு காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், 4,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 12,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வான் வழி தாக்குதலில் காசா பகுதியில் சுமார் 40 சதவீத கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. காசாவுக்கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டு உள்ளது. காசாவில் பொதுமக்களின் கட்டடங்கள், வழிபாட்டு தலங்கள், கல்வி நிலையங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்குகிறது என்ற குற்றச்சாட்டு எழும் நிலையில் இதற்கு கீழ்தான் ஹமாஸின் சுரங்கம் இருக்கிறது என்றும், அதைத் தான் தாக்குகிறோம் என்று வாதிடுகிறது இஸ்ரேலியபடை. அல் - குத் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், கடும் சேதம் ஏற்பட்டுள்ளதால், அந்த மருத்துவ சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. மருத்துவமனைகள் மீதும், அகதிகள் முகாம்கள் மீதும் இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தி உள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. தொலைவுக்கு இரகசிய சுரங்க நகரத்தை ஹமாஸ் அமைத்துள்ளனர் என்றும், இந்த சுரங்க நகரத்தில் பதுங்கியிருந்து இஸ்ரேல் இராணுவத்துக்கு எதிராக அவர்கள் போரிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 2021ம் ஆண்டு, ஹமாஸின் 100 கிலோமீட்டர் நீளம் கொண்ட சுரங்கத்தை நாங்கள் அழித்து விட்டோம் என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. ஆனால் இதற்கு பதிலடி கொடுத்த ஹமாஸ், நீங்கள் அழித்தது வெறும் 5 சதவீதமான சுரங்கத்தைத்தான். எங்கள் சுரங்க உறைவிடம் மொத்தமாக 500 கிலோ மீட்டர் நீளம் கொண்டது என்று தெரிவித்தனர்.


1948 இஸ்ரேல் உருவாகியது முதல் 1967 வரை காசா பகுதி எகிப்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1967-ல் நடந்த போரில் எகிப்திடம் இருந்து காசா பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இதன் பிறகு எகிப்து, காசா எல்லைப் பகுதியில் தடுப்புச் சுவரை எழுப்பியது. அப்போது எகிப்தில் உள்ள தங்களது உறவினர்களை சந்திக்க காசா பகுதி மக்கள் எகிப்துக்கு இரகசியமாக சுரங்கப் பாதை அமைத்தனர்.

இதை தடுக்க அமெரிக்காவின் உதவியுடன் எகிப்து அரசு கடந்த 2009-ம் ஆண்டில் காசா எல்லையில் 16அடி ஆழத்தில் அஸ்திவாரம் அமைத்து, 20 அடி உயரத்துக்கு இரும்பிலான சுவரை கட்டியது. இத்தகைய இரும்பு சுவருக்கும் கீழாக காசாவில் இருந்து எகிப்துக்கு இரகசிய சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன. இந்த பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து ஆயுதங்கள், எரிபொருள், உணவு பொருட்கள், மருந்துகள், கட்டுமான பொருட்கள் காசாவுக்கு கொண்டு வரப்பட்டன.


கடந்த 2005-ம் ஆண்டில் காசாவில் இருந்து இஸ்ரேல் ராணுவம் முழுமையாக வெளியேறியது. அதன் பிறகு ஹமாஸ் போராளிகள், காசா பகுதியில் பிரம்மாண்ட சுரங்க நகரத்தை நிர்மாணிக்கும் பணியை தொடங்கினர். நாள் தோறும் 22,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்கான கட்டுமான செலவை இரானும், முஸ்லிம் அமைப்புகளும் ஏற்றுக் கொண்டன என தெரிவிக்கப்பட்டது. ஹமாஸ் போராளிகள் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ தொலைவு நீளத்துக்கு சுரங்கப் பாதையை அமைத்துள்ளதாக உளவுத் தகவல்கள் வெளிவந்தன..




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும்.





ரிஷபராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த லாபம் வரும். உத்யோகத்தில் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக பணம் கைக்கு வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். வேகத்தை குறைத்து விவேகமுடன் செயலபடுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின் தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும்.





சிம்மராசி அன்பர்களே! சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.




கன்னிராசி அன்பர்களே! காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர் கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர்.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். அடுத்தவர்களுக்கும் உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும் போது கவனமாக பேசுவது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்திலும், மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.




மகரராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கப் பெறுவர்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்திசாதூரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். இருப்பதால் எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். வீண் கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் பங்காளியை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். இறை வழிபாடு நன்மை தரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மகாவம்ச மனோபாவம்:-

(16ம் பக்கத் தொடர்ச்சி) என வரலாற்று ஆதாரங்களுடன் கூறும் பொழுது தோன்றும் அதீத பதற்ற உணர்வுகளும் இந்த வகையைச் சேர்ந்தவை. 'சிங்கள பௌத்தம் என்ற கருத்தாக்கம் கட்டமைத்திருக்கும் தமிழ் விரோத உணர்வு காரணமாக 'தமிழ் பௌத்தம்' என்ற சொல்லே கடும் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது.

2015 ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியான போது விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து: பெரும்பான்மை மக்களில் சிறு தொகையினரும், சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையிலும் வாக்களித்து ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்திருக்கிறார்கள்.

இலங்கைப் பிரஜைகளான தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் வாக்குகளுக்கு (சிங்கள மக்களின் வாக்குகளுக்கு இருக்கும் அதேயளவிலான) மதிப்பு இருந்து வர முடியாது என்பதே அவர் இங்கு சொல்ல வரும் விடயம்.

கோல்பேஸ் அறகலய பூமியில் தாராளமாக பிரியாணியும், வட்டலப்பமும் பரிமாறப்படுவதை நாங்கள் பார்த்தோம் என்கிறார் நளின் டி சில்வா.

விதிவிலக்கான விதத்தில் கணிசமான எண்ணிக்கையிலான முஸ்லிம் பெண்களும், மௌலிமாரும் அங்கு திரண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது என்று எழுதுகிறார் மற்றொரு சிங்கள தேசியவாதியான சேன தோரதெனிய. (சிங்கள) அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை முஸ்லிம்களுக்கு — குறிப்பாக, சிறுபான்மை சமூகத்தினருக்கு இல்லை அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என்பதே இத்தகைய கருத்துக்களுக்கு ஊடாக இவர்கள் பூடகமாக முன்வைக்க முயலும் நிலைப்பாடு.

சிங்கத்தின் மக்கள்: சிங்கள அடையாளம் மற்றும் வரலாற்றினதும், வரலாற்றியலினதும் கருத்தியல் (1979) மற்றும் ''இனப் போராட்டம் நிகழ்ந்து வரும் ஒரு கால கட்டத்தில் வரலாற்றியல்: சமகால இலங்கையில் கடந்த காலம் கட்டமைக்கப்படும் விதம்'' (1995) போன்ற விரிவான ஆய்வுக் கட்டுரைகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வரலாற்றுத்துறை பேராசிரியர் லெஸ்லி குணவர்தன இந்த 'மகாவம்ச மனோபாவம்' தொடர்பான சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'தம்ம பிரதீப்பிகாவ' என்ற காவியத்திலேயே முதன் முதலில் சிங்கள இனம் என்ற சொல் காணப்படுகிறது என அவர் முன் வைத்த கருத்து கடும் சர்ச்சைகளைக் கிளப்பியது.

சிங்கத்தின் மக்கள்: சமகால இலங்கையில் சிங்கள இனத்துவ அடையாளம், கருத்தியல் மற்றும் வரலாற்றுத் திரிபுவாதம் (1989) என்ற நீண்ட கட்டுரையில் அதற்கு எதிர் வினையாற்றினார் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிங்களத்துறை பேராசிரியரான கே என் ஓ தர்மதாச (ஆர்வமுள்ளவர்கள் இணையத்தில் தேடி, அந்த ஆங்கிலக் கட்டுரைகளை படிக்க முடியும்).

பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட 'கிரள சங்தேசய' மற்றும் 'வடிக சட்டன' போன்ற சிங்கள காவியங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான வன்மம், கண்டி இராச்சியத்தில் அக்கால கட்டத்தில் நிலவி வந்த (சிங்கள — தமிழ் உறவுகள் தொடர்பான) முதன்மைக் கருத்தாக்கத்துக்கு நேர்மாறானது என்கிறார் லெஸ்லி குணவர்தன.

ஆனால், அநகாரிக தர்மபாலவின் வாரிசுகளான குணதாச அமரசேகர, நளின் டி சில்வா, சேன தோரதெனிய மற்றும் வசந்த பண்டார போன்ற சமகால தேசியவாதிகள் தொடர்ந்தும் தமிழர்களையும், (ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர்) முஸ்லிம்களையும் சிங்களவர்களின் எதிரிகளாக கட்டமைக்க முயற்சித்து வருகின்றார்கள்.

சிங்கள சமூகத்தின் முதன்மைக் கருத்தியலாக அந்தச் சிந்தனைப் போக்கு நீடிக்கும் வரையில், உத்தேச புதிய அரசியல் யாப்பில் இலங்கையை ஒரு மதச்சார்பற்ற நாடாக (Secular Nation) பிரகடனம் செய்வது எப்படிப் போனாலும், சாய்ந்தமருது பிரதேசத்துக்கு நகர சபை அந்தஸ்தை பெற்றுக் கொள்வது கூட சாத்தியப்பட முடியாது.

ஏனென்றால், அத்தகைய ஒரு சிறு நிர்வாக ஏற்பாட்டையும் கூட, 'சிங்கள இனம் எதிர்கொள்ளும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக' சித்தரித்துக் காட்டி, அதற்கெதிராக சிங்கள மக்களை அணி திரட்டும் காரியத்தை இன்றைய சூழலில் மிக எளிதில் மேற்கொள்ள முடியும்.

அந்தப் பின்புலத்தில், கரையோர அம்பாறை மாவட்டம் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு போன்ற அபிலாஷை மிக்க கோரிக்கைகள் தொடர்ந்தும் வெறும் கனவுகளாக மட்டுமே நீடிக்க முடியும்!

# சீனா ஏன் தமிழர்களை நோக்கி...

(17ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் உறுதியற்று இருக்கின்றதோ, அது தான் சீனாவிற்கான இடமாகும். ஏனெனில் சீனா சட்டத்தின் ஆட்சியை கருத்தில் கொள்ளும் நாடு அல்ல. அமெரிக்க காங்கிரஸ் அறிக்கையின்படி, சீனா சட்ட விரோத செயற்பாடுகளின் கூடாரமாகும்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்களை நோக்கிய சீனாவின் நகர்வு தொடர்பில் அதிக விழிப்புணர்வு அவசியம். சீனாவையும் நாங்கள் தந்திரோபாயமாக அணுக வேண்டுமென்று சிலர் கூற முற்படுகின்றனர்.

தமிழர்கள் சீனாவுடன் உறவுகளை கட்டியெழுப்பினால், இந்தியாவும் அமெரிக்காவும் தமிழர்களை நோக்கி அதிகம் சாயுமென்று சிலர் வாதிட முற்படுவாக தெரிகின்றது. இவ்வாறான அபிப்பிராயங்களுக்கு பின்னாலும் சீனாவே இருக்க வாய்ப்புண்டு.

ஏனெனில் சீனாவின் தந்திரோபாயங்களில் ஒன்று நுழைந்து ஆடுவது அதாவது, நுழைந்து வலுவாக காலூன்றி விட்டால், அதன் பின்னர் அங்கிருந்து எவராலும் சீனாவை அப்புறப்படுத்த முடியாது.

சீனா அடிப்படையிலேயே தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரான நாடு. மனித உரிமை மற்றும் ஜனநாயக விழுமியங்களை கொள்கையளவில் எதிர்க்கும் நாடு.

இவ்வாறானதொரு நாடு தமிழ்பகுதிகளுக்குள் செல்வாக்கு செலுத்த நேரிட்டால், தமிழ் மக்களின் அரசியல் அபிலாலைகளுக்கு என்ன நடக்கும்?

இந்தக் கேள்வியிலிருந்து தான் நாம் விடயங்களை நோக்க வேண்டும். இது சீனாவிற்கு எதிரான நிலைப்பாடல்லமாறாக, தமிழ் மக்கள் தங்களின் நலன்களை நிறுத்துப் பார்த்துத் தான் ஒவ்வொரு விடயத்தையும் முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறு நோக்கினால் தமிழ் மக்களின் நலன்களோடு சீனா ஒரு போதும் நிற்க முடியாத நாடு. இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டு மாயின் சீனா அதன் நம்பகத் தன்மையை தமிழ் மக்களுக்கு நிரூபிக்க வேண்டும். ஐ.நாவில், அரசை பாது காக்கும் கொள்கையை கைவிட வேண்டும். ஆகக் குறைந்தது 13வது திருத்தச் சட்டத்தையாவது ஆதரிக்க வேண்டும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# நான் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் நினைக்கின்றீர்கள்? ஊடகவியலாளரிடம் கேள்விகேட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்வீர்களா என கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரிடம் நான் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள் என ஜனாதிபதி பதில் கேள்வி எழுப்பி சுவாரஷ்யமாக உரையாடியுள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கேள்வி - ஜனாதிபதியானதும் நீங்கள் தனித்து விட்டதாக தெரிவித்தீர்கள் - நாங்கள் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை எதிர் கொள்ளவுள்ளோம் உங்களின் எதிர்கால திட்டங்கள் என்ன நீங்கள் மீண்டும் ஜனாதிபதியாவதற்காக தேர்தலில் போட்டியிட விரும்புகின்றீர்களா ஐக்கிய தேசியகட்சியை வலுப்படுத்தி அதன் சார்பில் போட்டியிடப் போகின்றீர்களா அல்லது கூட்டணியை ஏற்படுத்தப் போகின்றீர்களா?

பதில்- ஐக்கிய தேசிய கட்சி அடுத்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற விரும்புகின்றது ஏன் என்றால் அவர்கள் மாத்திரமே உண்மையை பேசினார்கள் - தெரிவித்தார்கள் அதன் காரணமாகவே அவர்கள் அரசியலில் இருந்து அகற்றப்பட்டார்கள் அதுவே அவர்களின் பலமான விடயமாக காணப்படப் போகின்றது. பல புதிய முகங்கள் உள்ளன அரசாங்கத்தில் எதிர்கட்சியில் உள்ள பலர் உள்ளனர் அவர்களும் போட்டியிடுவார்கள். நாங்கள் வங்குரோத்து நிலையை இல்லா மல் செய்வதே - அழிப்பதே எனது முதல் பணி.

வங்குரோத்து நிலையை இல்லாமல் செய்ததும் நாங்கள் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம் அந்த தருணத்தில் என்ன செய்வது என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும்.

வங்குரோத்து நிலையை ஒழிப்பதற்காக உங்கள் அனைவரினதும் ஆதரவை பெறுவதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

கேள்வி- உங்கள் திட்டங்கள் நோக்கங்கள் வெற்றி பெற்றால் நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவீர்களா?

பதில்- நான் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள் நான் உங்களை கேட்கின்றேன் நான் அதற்கு பதிலளித்தால் பல எதிர்வினைகள் வெளியாகலாம். ரணில்- விடை என்ன?

கேள்வி - ஏன் போட்டியிடக் கூடாது அப்படியானால் ஏன் மக்களிடமிருந்து எதிர்வினைகள் வெளியாகலாம் என தெரி விக்கின்றீர்கள்?

பதில்- நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை ஆனால் நான் உங்களின் தனிப்பட்ட திட்டங்கள் என்னவென்பதை அறிய விரும்புகின்றேன் . நான் அது முடிவடையும் வரை காத்திருப்பேன் என தெரிவித்தேன். பொருளாதார நிலைமைய சாதகமான விதத்தில் மாற்றியமைப்பதே எனது நோக்கம் நாங்கள் அந்த இலக்கை நெரு ங்கி விட்டோம், நான் அரசியல் இல் லாமல் புதிய பொருளாதாரத்தை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன் - நாங்கள் அது குறித்து கலந்துரையாடுவோம் என்றார்.

